இதழ் 321
11 ஜனவரி 2025
16 பக்கங்கள்

# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/c/IlakkuWeb
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



அனைவருக்கும் இலக்கின் சார்பில்
## தைப் பொங்கல்
வாழ்த்துக்கள்

# பயங்கரவாத தடைச் சட்டத்தை கைவிட






# அநுர தயங்குவது ஏன்?

அகிலன்

# இலங்கையில் 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' யின் தோற்றமும் இன்றைய நிலையும்:



## கோட்பாடு - நடைமுறை - வரலாற்றுப் போக்கு



மு.திருநாவுக்கரசு


© 2025 இலக்கு இணையம்

## மாவீரர் துயிலும் இல்ல காணியில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!



விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலை சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி கையெழுத்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழு உறுப்பினர்கள், மாவீரர்கள், பெற்றோர்கள், உரித்துடையவர்கள் இணைந்து குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும் பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், குறித்த துயிலுமில்ல காணிக்கு முன்பாக கையெழுத்து போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டம்



யுத்தம் முடிந்து 15 வருடங்கள் கடந்துவிட்டபோதும் அரசியல் கைதிகள் இன்னும் சிறையில் வாடுகின்றனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் மீளவும் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலைக்காக பல்வேறு தரப்பினராலும் பல்வேறு விதமாகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் இதுவரையில் அரசியல் கைதிகளின் விடுதலை முழுமை பெறவில்லை.

மாறிமாறி ஆட்சிப் பீடமேறிய அரசாங்கங்கள் தேர்தல்களுக்கு முன்னால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கியபோதும் தேர்தல்களின் பின்னர் அவற்றைக் கண்டுகொள்ளவில்லை.

இந்நிலையிலேயே, பிறந்திருக்கும் புத்தாண்டிலாவது அரசியல் கைதிகளின் விடுதலையைச் சாத்தியமாக்கும் நோக்கில் போராளிகள் நலன்காப்பகம் வடக்கு கிழக்கின் பல்வேறு மாவட்டங்களிலும் கையெழுத் துப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

## ரோகிங்யா புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் UNHCR இலங்கையிடம் கோரிக்கை

ரோகிங்யா புகலிடக்கோரிக்கை யாளர்கள் தொடர்பில் இலங்கையிடமிருந்து தொடர்ந்தும் இரக்கத்தையும் விருந்தோம்பலையும் எதிர்பார்ப்பதாக அகதிகளுக்கான UNHCR தெரிவித்துள்ளது.



நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ரோகிங்யா அகதிகளை காப்பாற்றி பாதுகாப்பாக தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கிய இலங்கையின் உயிர்காக்கும் செயற்பாட்டை பாராட்டியுள்ள UNHCR, இலங்கை அதிகாரிகளிடமிருந்து தொடர்ந்தும் இரக்கத்தையும் விருந்தோம்பலையும் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த புதிய வருகையாளர்களிற்கு தொடர்ந்தும் இரக்கம் மற்றும் விருந்தோம்பலை காண்பிக்குமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்,என தெரிவித்துள்ள UNHCR இவர்களில் பலர் பலவீனமான நிலையில் உள்ள பெண்கள் குழந்தைகள்,இயலாமை காரணமாக அவர்கள் ஆபத்தான முயற்சியில் தங்கள் உயிர்களை பணயம்வைத்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

புதிதாக வருபவர்கள் பாதுகாப்பாக தரையிறங்குவதை உறுதி செய்வதும்,உயிர்காக்கும் உரிமைகளை பெறுவதை உறுதி செய்வதும் எங்களின் முன்னுரிமைக்குரிய விடயங்கள் என தெரிவித்துள்ள UNHCR, புதிதாக வந்துள்ளவர்களின் பாதுகாப்பிற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஐநாவுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதாக தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் பரவும் காட்டுத்தீ - இழப்பு 800 பில்லியன் டொலர்கள்?



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பரவி வரும் காட்டுத்தீயினால் இதுவரையில் 27,000 ஏக்கர் பரப்பளவில் உள்ள சொத்துக்கள் அழிவடைந்துள்ளதுடன், 150,000 இற்கு மேற்பட்ட மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். லொஸ் ஏஞ்சல் பகுதியில் உள்ள சன்ரா மொனிகா மற்றும் மலிபு ஆகிய பிரதேசங்களுக்கு இடையில் உள்ள பசுபிக் பலிசேட் எனப்படும் மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் மிக்க பகுதி தீயினால் கடும் சேதமடைந்துள்ளது.

பசுபிக் பலிசேட் பகுதியில் 75 விகிதமானவை எரிந்துவிட்டதாக அந்த பிரதேசத்தில் வசிப்பவர் தெரிவித்துள்ளார். மிகவும் ஆடம்பர வீடுகளைக் கொண்ட அந்த பிரதேசத்தில் அமெரிக்காவின் செல்வந்தவர்கள், கொலிவூட் திரைப்பட நடிகர்கள், மற்றும் வர்த்தகர்கள் அதிகம் வாழ்ந்துவருகின்றனர்.

2,000 இற்கு மேற்பட்ட வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்துள்ளன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## வெனிசுலாவை கைப்பற்ற அமெரிக்கா கடும் முயற்சி

வெனிசுலாவின் உறுதியை குலைத்து அதனை தன் வசப்படுத்தும் முகமாக அமெரிக்கா பெருமளவான நிதிகளை செலவிட்டு முன்னாள் அதிபர் உட்பட பலரை விலைக்கு வாங்க முயற்சித்து வருவதாக வெனிசுலாவின்அதிபர்நிகோலஸ்மடுரோ கடந்த புதன்கிழமை(8) தெரிவித்துள்ளார்.

வெனிசுலாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதே அமெரிக்காவின் பிரதான நோக்கம். 2024 ஆம் ஆண்டு வெனிசுலாவில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகளையும்



அமெரிக்கா ஏற்க மறுத்து வருகின்றது.

எனது நாட்டில் உள்ள ஊழல் வாதிகள் மற்றும் போலியான தேசியவாதிகளை நிதிகளை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சீன வெளிவிவகார அமைச்சர் பயணம் – ஆபிரிக்காவில் தாக்குதல்



கடந்த புதன்கிழமை (8) ஆபிரிக்க நாடான சாட்டிற்கு சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வங் ஜி பயணம் மேற்கொண்ட பின்னர் அந்த நாட்டின் அதிபரின் இல்லத்தின் மீது ஆயுதக்குழுவினர் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்குமிடையில் மேன்மைபெற்ற இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இந்த பயணம் அமைந்ததாகவும், சாட்டின் அதிபர் மகமெட் டெபியுடன் பேச்சுக்களில் ஈடுபட்டதாகவும் சீனத் தரப்பு தெரிவித்துள்ளது.


காலையில் சீன அதிபரின் பயணம் நிறைவுபெற்ற பின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்காவால் கிறீன்லாங்தை கைப்பற்றுவது முடியாத காரியம் – ஐரோப்பிய ஒன்றியம்

டென்மார்க்கின் நிர்வாகத்தின் கீழ் சுயாட்சி அலகாக இயங்கும் கிறீன்லாந்தை அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது படையினரை அனுப்பி கைப்பற்று வது என்பது இயலாத காரியம் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் இறைமை மதிக்கப்பட வேண்டும். இது ஒரு ஆபத்தே தவிர நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே இது தொடர்பில் நாம் அதிகம்




பேசத் தேவையில்லை. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடைமுறைகள் எம்மிடம் உண்டு.

ஐரோப்பிய ஒன்றியத்தில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## முற்றும் துறந்த பிக்குகளும் நில அபகரிப்பில் ஈடுபடுகின்றனர்!

திருகோணமலை மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் மட்டுமன்றி. முற்றும் துறந்த பிக்குகளும் மண்ணாசை கொண்டு குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 2172 ஏக்கர் நிலத்தினை பிடித்து வைத்துக்கொண்டு, மக்களை விவசாயம் செய்ய விடாமல் தடுத்தும் வருகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பாராளுமன்றில் மேலும் தெரிவிக்கையில், ''இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரிசி விலை உயர்வுக்கு வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள் மட்டுமன்றி. அரசினது அங்கங்களான பல்வேறு திணைக்களங்களும் காரணமாக உள்ளன. இதில் முதன்மை வகிப்பது தொல்பொருள் துறையாகும்.

தொல்பொருள் துறையானது தமிழ் மக்கள் சில நூற்றாண்டு காலமாக விவசாயம் செய்து வருகின்ற விவசாய நிலங்களை தமது தொல்பொருள் இடங்களாக அறிவித்துக் கையகப்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு தொடங்கி பத்து நாட்கள்கூட முடிவடையாத நிலையில், தொல்லியல் துறையானது ஜனவரி 6 மாலை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் வட்டவான் கிராமசேவகர் பிரிவில் அடங்கும் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிரோடு கூடிய விவசாய நிலத்தை தமது தொல்லியல் பகுதி என அறிவித்துள்ளது.

அதேபோன்று குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும்குச்சவெளி கிராம சேவையாளர் பிரிவில், நெற்களஞ்சியம் மற்றும் சந்தைப் பகுதியை தொல்லியல்துறை தொல்பொருள் பகுதி என அறிவித் துள்ளது.

குச்சவெளிப்பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள திரியாய கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும். பிரித்தானியர்களால் வழங்கப்பட்ட உறுதிகளைக் கொண்ட 150 ஆண்டுக் காலமாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வருகின்ற. அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் நிலத்தினை விவசாயம் செய்யவிடாமல் எல்லைக் கற்களைப் போட்டு பிடித்து வைத்துள்ளது.

இது மட்டுமல்லாமல் இதனை விடவும். குச்ச வெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தென்னைமரவாடி, புல்மோட்டை திரியாய, குச்ச வெளி. ஜாயாநகர். கும்புறுப்பிட்டி, நிலாவெளி.பெரிய குளம்முதலிய கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 1994 ஏக்கர் நிலத்தை எல்லைக்கற்களை இட்டுப் பிடித்து வைத்துள்ளது.

இந்த செயலானது நெல் உற்பத்தியில் பாரிய குறைப்பை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டுக்கு பேரிழப்பு. அதுமட்டுமன்றி தொல்லியல் துறை யானது. மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள டங்கும் இராஜவந்தான்மலை முருகன் கோயில், கூனித்தீவுமத்தளைமலை முருகன் கோயில், கிளி வெட்டி முத்துமாரியம்மன் கோயில் அதேபோன்று சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் திருமங்கலாய் சிவன் கோயில், ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் இலங்கைத்துறை முகத்துவாரம் பெரியசாமி கோயில் மற்றும் கல்லடி மலைநீலியம்மன் கோயில் அதேபோன்று. திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசெயலக பிரிவில் உள்ளடங்கும் கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும்.

தென்னமரவாடி கந்தசாமிமலை முருகன் கோயில், குச்சவெளி செம்பிமலை சிவன் கோயில் மற்றும்வளத்தான்மலைநாகதம்பிரான்கோயில்முதலிய சைவ கோயில்களையும், அவற்றை சூழவுள்ள விவசாய நிலங்களையும்கையகப்படுத்துகின்ற முன்முயற்சிக ளில் தொல்பொருள் துறை ஈடுபட்டுவருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதற்கு மேல், இலங்கையில் புகழ்பெற்ற கோணேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள 453

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## ஈழத்தமிழர் இறைமை நீக்கத்தை வலுப்படுத்தும் வகையிலேயே சிறிலங்காவின் 2025ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம்

அனைவருக்கும் எங்கும் மகிழ்ச்சி பொங்கிட வைக்கும் தைப்பொங்கல் வாழ்த்து. கூடவே வாழும் நாடுகளில் சமத்துவத்தையும் சமுகநீதியையும் நிலைநிறுத்த தைத்திங்களைத் தமிழர் மரபு மாதமாகக் கொண்டாடும் கனடியத் தமிழருக்கும் பிரித்தானியத் தமிழருக்கும் தமிழர் மரபுமாத வாழ்த்து. இனத்துவச் சிறுபான்மையினர் தாங்கள் வாழும் நாடுகளில் நாட்டுக்கான தங்கள் பங்களிப்புக்களை வெளிப்படுத்திச் சமத்துவத்தையும் சமூகநீதியையும் உறுதிப்படுத்துவதற்கே "மரபு மாதம்" அமெரிக்கா கனடா போன்ற நாடுகளில் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வகையில் இலங்கையில் 1983 ம் ஆண்டு யூலையில் சிறிலங்கா அரசாங்கம் நிகழ்த்திய ஈழத்தமிழின அழிப்பை அடுத்து பிரித்தானியாவுக்கும் கனடாவுக்கும் ஈழத்தமிழர் அரசியல் புகலிடம் கோரி பெருமளவில் புலம்பெயர்ந்து பின்னர் இந்நாடுகளின் இனத்துவச் சிறுபான்மை இனங்களாக வாழ்கின்ற வரலாற்றுப் பரிணாமத்தின் விளைவாக கனடாவில் கனடாவின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக வாழ்வுக்கு கனடியத் தமிழர்கள் அளித்த-அளிக்கிற அளப்பரிய பங்களிப்புக்களை கனடாவின் அனைத்துக் குடிகளுக்கும் வெளிப்படுத்திக் கனடியத் தமிழர்கள் தங்களின் சமத்துவத்தையும் சமுகநீதியையும் உறுதிப்படுத்திக் கொள்ள ஜனவரி மாதத்தை "தமிழர் மரபு" மாதமாகக் கனடா பிரகடனப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக இங்கிலாந்திலும் சில இலண்டன் கவுன்சில்களும் இலண்டன் பெருநகர் முதல்வர் அலுவலகமும் ஈழத்தமிழரின் வேண்டுகோளின் பேரில்"தமிழர் மரபு மாதமாக" ஜனவரியை முன்னெடுக்க அனுமதி வழங்கின. இதன் அடிப் படையில் அந்த அந்தக் கவுன்சிலில் வாழும் பிரித்தானிய தமிழரும் தமிழ் மரபு மாதமாக இம்மாதத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த தமிழ் மரபுமாதத்தில் கனடாவிலும் இங்கிலாந்திலும் வாழும் அனைத்து மக்களுக்கும் ஈழத்தமிழர் இந்நாடுகளுக்கு ஆற்றிய ஆற்றும் அளப்பரிய பங்களிப்புக்களும் இயன்ற அளவு அறிவாலும் கலையாலும் பகிரப்படவேண்டும். அத்துடன் ஈழத்தமிழர் இந்நாடுகளுக்கு வந்து அரசியல் புகலிடம் கோரிய வரலாற்றின் காரணங்களையும் அவை இன்னமும் 1983 முதல் இன்று வரை 41 ஆண்டுகள் அனைத்துலக நாடுகளாலும் அமைப்புக்களாலும் தீர்த்து வைக்கப்படாததின் சமகால விளைவுகளையும், இம்மாதம் முழுவதும் 01. பள்ளிகளில் பல்கலைக்கழகங்களில் அறிவியல் வரலாற்று ரீதியாக மாணவர்களுக்கும் 02. சமகால நிலைமைகளையும் ஈழத்தமிழரின் தொன்மையின் தொடர்ச்சியின் தன்மைகளையும் ஊடகங்கள் வழி அனைத்து உலகிற்கும், 03. நேரடிச் சந்திப்புக்கள் வழி நாட்டின் உள்ளூர் அரசியல் தலைமைகள் மக்கள் அமைப்புக்கள் பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். இத்தெளிவாக்கல் வழி ஈழத்தமிழரின் வெளியகத் தன்னாட்சி உரிமையினை ஈழத்தமிழர்கள் பெருமளவில் குடிகளாக வாழும் பிரித்தானியாவும் கனடாவும் அங்கீகரித்து ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கு இலங்கைத் தீவில் தீர்வுக்கு உதவுவது இந்நாடுகளின் ஈழத்தமிழர் தாயகத்துடனான கூட்டாண்மையும் பங்காண்மையும் வலுப்பெற வைக்குமென்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 1வது வரவுசெலவுத் திட்டமான 2025ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திலும் முன்னைய சிறிலங்கா அரசாங்கங்களின் வழியிலேயே ஈழத்தமிழர் இறைமை நீக்கம் ஈழத்தமிழர் தேசிய நீக்கம் என்பவற்றை வேகப்படுத்தி அனைவரும் சிறிலங்கன் என்கிற அரசியலமைப்பால் ஈழத்தமிழரின் தேசஇனத்தன்மையை வலுவிழக்கவைக்க உதவக்கூடிய வகையிலேயே நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனை சிறிலங்காவின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்காக கடந்த 2024ம் ஆண்டை விட 5298 கோடியே 65 இலட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கி மொத்தம் 61744 கோடியே 50 இலட்சம் ரூபா இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெளிவாக்கியுள்ளது ஏன் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைப் பாதுகாப்புக்குச் செலவிட வேண்டும்? எந்த நாட்டுடன் சிறிலங்கா போர் செய்யப் போகிறது என்ற இயல்பான கேள்வியை முன்வைக்கும் எவருக்கும் இந்த மேலதிக நிதி ஒதுக்கீடு ஈழத்தமிழர் தாயகத்தில் ஈழத்தமிழரின் இறைமை நீக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்களுக்கான பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு என்பது விடையாக அமைகிறது.

அவ்வாறே பௌத்தத்துக்கு பௌத்த கலாச்சாரத்துக்கு முன்னுரிமை என்ற அதே பழைய நிலைப்பாட்டையே மாற்றத்துக்கான அரசாங்கம் என்கிற தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கொண்டுள்ளமையைப் புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு 13,725,000,000 ரூபா. பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு 3,563,000,000 ரூபா, முஸ்லீம் சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு, 210,000,000 ரூபா, கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்துக்கு 270,000, 000 ரூபா, இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு 300,000,000 ரூபா என்ற நிதி ஒதுக்கீடுகள் உறுதி செய்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் முன்னர் எந்தக் குறைபாடுகள் இலங்கைத் தீவின் மக்களின் சமத்துவ வாழ்வுக்குச் சகோதரத்துவ வாழ்வுக்குச் சுதந்திர வாழ்வுக்கு பாதகமாக இருந்தனவோ அவற்றை மீளவும் உறுதிப்படுத்தும் நிலையில்தான் தேசிய மக்கள் சத்தியின் 2025 வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளது. சிறிலங்காவின் சிங்கள ஆய்வாளரரன முனைவர் ஜெகான் பெரேராவே தூய்மையான சிறிலங்கா போன்ற முடிவெடுக்கும் அமைப்புக்களுக்கு அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டவர்கள் பெரும்பான்மைச் சமுகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது கடந்த கால நினைவுகளை எழுப்பக் கூடியதாக உள்ளதென்று நாளாந்தப் பத்திரிகைகளில் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியுள்ளமை தேசிய மக்கள் சத்தி இனத்துவச் சிறுபான்மையினங்களை எந்த அளவுக்கு முடிவெடுக்கும் உரிமையற்றவர்களாக இன்றும் நடாத்துகிறது என்பதை உலகிற்குத் தெளிவாக்குகிறது.

இந்நிலையில் கவர்ச்சிகரமான பேச்சுக்கள் வழி சிறிலங்காவினர் அனைவருக்குமான சமத்துவ ஆட்சி என்பதன் உள்நோக்குகளை உணராத ஈழத்தமிழ் இளையோரும் தெரிந்தும் இணைந்து வாழ்ந்து அரசியல் வாழ்வைத் தங்களது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்தும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர் தாயகப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்கான வெற்றிக்குக் காரணமாகும் நிலையிலேயே இன்று உள்ளனர். தேசிய மட்ட ஆட்சி யென்பது சிங்கள பௌத்தர்களுக்கே என்பது உறுதியான நிலையில் உள்ள இலங்கைத் தீவில் கிராமங்கள் நகரங்கள் வழியான சக்தியளித்தல் வழியாகத் தான் ஈழத்தமிழர் இறைமையும் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளும் மக்கள் மனநிலையில் நிலைப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ள நிலையில் ஈழத்தமிழர்களின் இறைமை குறித்த அறிவார்ந்த விழிப்புணர்வும் தேசிய வாழ்வுக்கான ஈழத்தமிழரின் ஒருமைப்பாட்டுடன் கூடிய ஒருமித்த வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படாவிட்டால் ஈழத்தமிழர் இலங்கைத் தீவினர் என்ற தேசத்தன்மையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையுடன் இலங்கைத் தீவில் வாழ்கின்றனர் என்ற உண்மையும் தேய்வடைந்து ஈழத்தமிழர் சிங்கள தேசத்தில் சிங்களவர்களில் தங்கி வாழும் உரிமைகளற்ற சமுகமாக அடிமைப்படுவர் என்பதே இலக்கின் கருத்து.

இந்நிலை தோற்றுவிக்கப்பட்டால் அமெரிக்காவின் ஜனவரி 20ம் திகதிக்கு பின்னதான டிரம்பின் அரசியல் அநுரகுமர திசநாயக்காவை நண்பராக்கி எப்படி கனடாவில் பனமாவில் கிறீன் லாண்டில் ஆட்சிப்பரப்பை அகலப்படுத்தப்பார்க்கின்றதோ அவ்வாறே இலங்கையிலும் அகலப்படுத்த முயலலாமென்பதால் ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினை மேலும் சிக்கலாகும் என்பது இலக்கின் எச்சரிப்பாகவுள்ளது.

**ஆசிரியர்**

# பயங்கரவாத தடைச் சட்டத்தை கைவிட






# அநுர தயங்குவது ஏன்?

அகிலன்

கடந்த சுமார் 46 வருடகாலமாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தயாராகவில்லை என்பது இப்போது வெளிப்படையாகியுள்ளது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பாக இந்த வாரத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்கள். இது தொடர்பில் தமது நிலைப்பாடு என்ன என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதன்போது உறுதியாகத் தெரிவிக்கத் தவறியுள்ளது. இவ்விடயத்தில் அரசின் நழுவல் போக்கு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தயாராகவில்லை என்ற செய்தியைத்தான் தந்திருக்கிறது.

ரெலோ அமைப்பின் செல்வம் அடைக்கல நாதன் மட்டுமன்றி, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக இந்த வார ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்கின்றார்கள். இவ்விடயத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கும் என்ற எதிர்பார்ப்பு எதிர்த் தரப்பினரிடம் இருந்த போதிலும், மௌனமாக இருக்கும் உபாயத்தையே அரசாங்கம் இவ்விடயத்தில் கையாண்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் பொறுத்தவரையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள சில அம்சங்கள் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியம் என்று அவர்கள் கருதுகின்றார்கள். அதனால், மாற்றுத் திட்டம் ஒன்று இல்லாமல் இதனை ரத்துச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்ற கருத்து ஒன்றும் எதிர்க் கட்சிகள் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டிற்குள் சுதந்திரமாக வந்து, முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தை செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதால், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் - குறிப்பாக முதலீட்டாளர்கள் தாயகம் திரும்பி முதலீடுகளை மேற்கொள்வதற்கு அச்சமடைகின்றனர் என்றும் அவர் கூறினார்.

“எதிர்க்கட்சியில் இருந்தபோது நீங்கள் எதிர்த்த பயங்கரவாதத் தடைச் சட்டம் ஏன் இன்னும் அமுலில் காணப்படுகின்றது?” என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் செவ்வாய்கிழமை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

“உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து, 15 வருடங்களுக்கு மேலாகியும் இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது. தற்போது இந்த சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்க் கருத்து கொண்டோர், அரசுக்கு எதிரான போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன” என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

“இதன் காரணமாக இலங்கை கையொப்பமிட்ட மற்றும் அதற்குக் கட்டுப்பட்ட சர்வதேச சட்டங்கள் தொடர்பிலும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது” என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டியிருக்கின்றார். பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் அரசிடம் சஜித் பிரேமதாஸ மூன்று கேள்விகளை எழுப்பியிருந்தார். ஆனால், அரச தரப்பு அவற்றுக்கு பதிலளிக்கவில்லை.

***இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங் கத்தின் நிலைப்பாடு என்ன?***

***அதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் முன் வைக்கும் மாற்றுத் தீர்வுகள் என்ன?***

***இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?***

இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகவும் அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும் சஜித் வலியுறுத்தினார். அரசாங்கம் இதற்குப் பதிலளிக்காது என்பதைத் தெரிந்து கொண்டுதான் இந்தக் கேள்விகளை சஜித் எழுப்பினரா?

### 46 வருட வரலாறு

1979 ஆம் ஆண்டு, ஜூலையில், பாராளுமன்றத்தின் மூலம் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த 46 வருடகாலமாக நடைமுறையில் உள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த எனக் காரணம் கூறப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகக் கூறி, இதனை கட்டுப்படுத்துவதற்கான ஒரு தற்காலிக சட்டமாகத்தான் அப்போதைய அரசாங்கம் இதனை கொண்டுவந்தது. காலப் போக்கில் இது நிரந்தர சட்டமாக நிலைத்துவிட்டது.

தமிழ்ப் போராளி அமைப்புக்களின் தோற்றமும், அவர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கிச் சென்றமையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான தேவையை அரசாங்கத்துக்கு அன்று ஏற்படுத்தியிருந்தது. இதன் பல அம்சங்கள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு முரணாக இருப்பதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்வதற்கான அதிகாரம், தடுத்து வைப்பதற்கான அதிகாரம் என்பன பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. மனித உரிமை அமைப்புக்களின் கண்டனத்துக்குள்ளான விடயங்களாகவும் இவைதான் உள்ளன. ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அவைதான் அவர்களுக்கு முக்கியமானவையாகவும் தேவையான வையாகவும் இருந்தன. அதேவேளையில், பொலிஸாரின் அதிகார துஷ்பிரயோகத்துக்கும், அத்துமீறல்களுக்கும் கூட அவைதான் காரணமாக இருந்தன என்பதும் கவனிக்கத் தக்கது.

இந்தப் பின்னணியில்தான், இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைப்பது தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து தொடர்பிலும், இந்த சட்டத்தின் கீழ் பிடிவிராந்து இல்லாமல் கைது செய்வது உள்ளிட்டவை குறித்தும் கேள்வி எழுப்பிய எதிர்க் கட்சித் தலைவர், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களின்படி இதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா, என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கின்றார்.

தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஒடுக்குவதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 இல் கொண்டுவரப்பட்டது. ஆனால் காலப்போக்கில்அனைத்துத்தரப்பினர்மீதும்இந்தச் சட்டம் பாய்ந்தது. இரண்டு தடவைகள் ஆயுதப்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கையில் ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’யின் தோற்றமும் இன்றைய நிலையும்:



# கோட்பாடு - நடைமுறை - வரலாற்றுப் போக்கு

**இலங்கை வரலாற்றில் ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’யும் அதற்கான தத்துவார்த்த அணுகுமுறையும்**

இனப்படுகொலை என்பது ஏதோ ஒரு நாளில் நிகழ்ந்துவிடும் தன்னியல்பான நடவடிக்கை அல்ல. மாறாக அது ஒரு ஒடுக்கும் சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது தொடர்ந்து, நீண்டகால அளவில் படிப்படியாக செயல்படுத்தும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளின் இறுதி விளைவாகவே நடக்கிறது. எனவேதான் இனப்படுகொலையை ‘கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை’என்று அழைக்கிறோம்.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையும் அதற்கான தத்துவார்த்த அணுகுமுறையும் பற்றிய ஆழமான பார்வை நமக்கு அவசியமானது. காலனிய ஆதிக்கத்திற்கு எதிரான எந்தொரு தேசிய விடுதலைப் போராட்டமும் என்றோ ஒருநாள் வெற்றி பெறுவது நிச்சயம்.

ஆனால் பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசற்ற தேசிய இனங்கள் எல்லாம் விடுதலை அடையலாம் என்றில்லை. சிலது வெற்றி பெறலாம் , சிலது தோல்வியடையலாம். அவையவற்றிற்கான அகப்புறச் சூழலைக் கையாள்வதிலேயே இவை அடங்கியுள்ளன. திபெத், காலிஸ்தான் என்பன பிரிந்து செல்வதற்கான போராட்டத்தில் வெற்றிக்கான வாய்ப்பைப் பெரிதும் கொண்டிருக்கவில்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு, வெற்றி பெறுவதற்கான கடினமான பாதையாவது உண்டு. அதற்கான வாய்ப்புக்களை மிக நுணுக்கமாகக் கையாண்டாலே வெற்றியும் சாத்தியம்.

ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் சூழலில், அதை சரிவரப்புரிந்து மிகத் துல்லியமாகக் கையாள்வதன் வாயிலாக விடுதலை அடைய முடியும்.

ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவம் மிகவும் வலுவானது. ஈழத்தமிழர் சார்ந்த அகத்தேசிய நிலை, உள்நாட்டு நிலை, அண்டைநாட்டு நிலை, அயல்நாடுகள் மற்றும் உலக நாடுகள் சார்ந்த நிலை மேலும் புவியியல் வரலாற்று நிலை என்பனவற்றால் அது வலுவாக இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர் சார்ந்து கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை முறைமையை விருப்பு வெறுப்பிற்கு அப்பால் துல்லியமாக அளவீடு செய்யும் எத்தனமாக இக்கட்டுரை அமைகிறது.

அறிவின்றி அணுவும் அசையா என்ற அறிவியல் யுகத்தில் அறிவின் வழியது விடுதலை என்ற மகுடத்துடன் ஈழத் தமிழருக்கான விடுதலையை வடிவமைக்க வேண்டும்.



மு.திருநாவுக்கரசு

எல்லா விதமான தூய்மை வாதங்களும், கற்பனா வாதங்களும், கடும்போக்கு வாதங்களும் பார்வைக்கு கவர்ச்சிகரமானவை ; பேச இனிமையானவை. ஆனால் அவை நடைமுறையில் எதிரிகளின் சேவகர்களே.'' ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது.'' நடைமுறைக்குப் பொருத்தமான அறிவு எதுவோ அதுவே சரியானது. எல்லாவற்றிற்கும் ஒரு பண்பாட்டுப் பார்வை வேண்டும் என்பது போல அறிவியலுக்கும் அதுவே பொருத்தமானது. பண்பாடற்ற அறிவும் எதிரியின் ஊன்றுகோல்தான்.

***“Strong minds discuss ideas.***
***Average minds discuss events.***
***Weak minds discuss people”***

என்ற சாக்ரடீஸின் கூற்றை தமிழாக்கம் செய்தால், அது பின்வரும் பொருளைத் தரும்.

உன்னதமானவன் தத்துவ ஞானத்தை பற்றி பேசுவான்.
சாமானியன் சம்பவங்களைப் பற்றி பேசுவான்.
அற்பன் அடுத்தவனைப் பற்றி பேசுவான்.

ஈழத்தில் மலையென உயர்ந்த பெரும் தியாகத்திற்கும் மடுவென வீழ்ந்த பெரும் தோல்விக்கும் இடையே உள்ள இட்டு நிரப்ப முடியாத இடைவெளியில் இனி அடுத்தது என்ன?
மாயாஜாலம் கொண்ட கற்பனை கதைகளையும், மந்திரக்கோல் எந்தும் அரசியல் வித்தைகளையும், மக்களை ஏமாற்றும் அலாவுதீனின் அற்புத விளக்குக் கதைகளையும் கைவிட்டு வெற்றிக்கு ஏதுவான அறிவார்ந்த அரசியல் பாதையை கண்டறிய வேண்டும்.

உலகளாவிய அரசியல் நடப்பியலின் பின்புலத்தில் நின்று, ஈழத் தமிழரின் விடுதலைக்கான அணுகுமுறையை நடைமுறைக்குப் பொருத்தமாக வடிவமைக்க வேண்டும்.

‘வேட்டையாடும் சிங்கக் கூட்டம் இரண்டு தடவைகள் தோல்வியடையும் போது தனது வியூகத்தை மூன்றாவது தடவை மாற்றி அமைத்திடும்’என்று ஒரு பிராணிகள் நடத்தையியல் விஞ்ஞானக் கூற்றுண்டு.

அரசியலை அதன் இயல்பான உலகளாவிய நடப்பியலுக்கு ஊடாக எடைபோட்டு முன்னெடுக்க வேண்டுமே தவிர , ரம்யமான மன விருப்பு-வெறுப்புகளுக்கு ஊடாகவோ அன்றி குரோதமான மன உந்துதல்களுக்கு ஊடாகவோ அல்ல.

சூழலைப் புரிந்து , தன்னிலை அறிந்து, மாற்றான் நிலை அறிந்து , பொருத்தமான உடனடி நீண்ட கால இலக்குகளை தெரிந்து காணப்படும் சாதக -- பாதக வாய்ப்புகளுக்கு ஏற்ப நடைமுறைச் சாத்தியமான பாதைக்கு ஊடாக அரசியலை முன்னெடுக்க வேண்டும். இது முற்றிலும் விஞ்ஞானபூர்வமான, அறிவியல் முறையாக அமைய வேண்டியது அவசியம்.

**விடுதலைக்கான புதிய சிந்தனையும் புதிய வழியும்.**

ஈழத்தமிழர் வாழவேண்டும் எனில் அவர்கள் தம்மைத் தாமே ஆளவேண்டும்.

தம்மைத் தாமே ஆள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கு முதலில் அவர்கள் தம்மை ஓர் ஒருங்கிணைந்த சக்தியாக ஆக்கவேண்டும். கூடவே தம்மைச் சூழவுள்ள யதார்த்தத்தை சரிவர கையாண்டு நடைமுறைக்கு பொருத்தமான நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான தகுதியையும் அறிவார்ந்த ரீதியில் கொண்டிருக்க வேண்டும் .

“ஒன்றுக்கு ஆசைப்படும் முன் முதலில் உன்னை அதற்குத் தகுதியாக்கிக்கொள்” ( *“First deserve then desire”*) என்ற ஆங்கிலப் பழமொழி கவனத்திற்குரியது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அநுரவின் ஆட்சியும்..! அரசியல் காட்சியும்..!

பா.அரியநேத்திரன்

பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கத்தின் அரசியல் காட்சிகளை பார்த்தால் பாதுகாப்பு அமைச்சு ஆயுதப்படைகளை மேம் படுத்தும் நடவடிக்கையே இப்போது முன்னிலைப் படுத்துவது தெளிவாக தெரிகிறது.

இதற்கு நல்ல உதாரணம் கடந்த 2024, டிசம்பர்,06, ம் திகதி பாராளுமன்றத்தில் இலங்கை யின் தேசிய மக்கள் சக்தி சமர்பித்த நான்கு மாத செலவறிக்கை இதில் பாதுகாப்புக்கான அதிக ஒதுக்கீடுகள் மொத்தம் ரூபா 208.01 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி (92 பில்லியன்) சுகாதாரம் (161.99 பில்லியன்) ஆகிய முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்படும் தொகையை விட அதிகமாக ஒதுக் கப்பட்டுள்ளது.

இதேபோல் புத்தசாசன திணைக்களத்துக்கு ரூபா 270.5 மில்லியன், தொல்லியல் திணைக் களத்துக்கு 701.5 மில்லியன் ஒதுக்கீடுகள், சமூக அவசியங்களை விட பௌத்தமத, கலாச்சார முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கின்றன.

இலங்கையில் யார் ஆட்சிபீடத்தில் ஏறி னாலும் பாதுகாப்பு தரப்பையும், பௌத்த மதத்தை யும் திருப்திபடுவதுதான் எழுதப்படாத விதியாக உள்ளது.



ஜனாதிபதியால் 2024, செப்டம்பர்,23 பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப் பட்ட எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய் கொந்தாவிடம் பாதுகாப்பு அமைச்சில் கடமை களை பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் முதலாவதாக கண்டி தலதா மாளிகைக்குச் சென்று ஆசிபெற்றபின்னர் ஆயுதப்படைகளின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வது என்பதன் அர்த்தம் என்னவென ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த அவர் எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் நாம் கண்டறிந்துள்ளோம்.

என்னுடைய தலைமையின் கீழ் நாட்டு மக்கள், பொது மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் அனைத்து முறைகளிலும் ஏற் படும் சம்பிரதாயபூர்வமல்லாத அச்சுறுத்தல்கள் நிறையவே இருக்கின்றன.

அந்த சம்பிரதாயபூர்வமல்லாத அச்சுறுத்தல் களுக்கு முடிந்தவரை விரைவாக நிவாரணமளித்து முப்படையினருக்கும் காணப்படும் இயலுமையை மேலும் முன்னேற்றமடையச் செய்து அவர்களின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் அந்த பணியை நிறைவு செய்வதே எமது அரசின் எதிர்பார்ப்பு.

ஆயுதப்படைகளை தொழில்சார் மட்டத்தி ற்கு கொண்டு வருவதற்கு தாம் செயற்படவுள் ளோம்.

இராணுவத்தின் அனைத்து பக்கத்திலும் நவீன தொழில்நுட்பம், பயிற்சி, பயற்சிப் பெற வேண்டிய வாய்ப்பு, தொழில் ரீதியாக உயர் நிலைக்குச் கொண்டுச் செல்வதற்கான அனைத்து காரணங்களையும் கண்டறிந்து முறையான வகையில் செயற்படுவதே எமது எதிர்பார்ப்பு" என்றார் இவருடைய இந்த கருத்தை பார்த்தால் தேசிய பாதுகாப்புக்கு எங்கிருந்து அச்சுறுத்தல் உள்ளது என்பது விளங்கவில்லை. இதேபோல் புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்எஸ்பீ பீஎஸ்சீ ஐஜீ அவர்கள் 04 ஜனவரி 2025 அன்று கண்டி புனித ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டார்.



இலங்கை இராணுவத்தின் 25 வது தளபதி யாக பதவியேற்ற பின்னர் தளபதியின் முதலாவது விஜயம் ஸ்ரீ தலதா மாளிகைக்கான விஜயமாகும். அங்கு வருகை தந்த இராணுவத் தளபதியை ஸ்ரீ தலதா மாளிகையின் நிர்வாகச் செயலாளர் வரவேற்றதை காணமுடிந்தது.

இலங்கை அரசியல் பௌத்த மதத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இவ்வாறான அரசியல் வாதிகள் அல்லாத அதிகாரிகளின் நடவடிக்கையால் புலப்படுகிறது.

ஒருபுறம் மாகாணசபைகளுக்கு காணி பொலிஷ் அதிகாரம் தேவை என வலியுறுத்தும் நிலையில் இப்போது அநுர அரசால் அதை மூடி மறைக்க வடக்கு கிழக்குப்பகுதிகளில், அதிகளவு தமிழ் பொலிஸாரை நியமிப்பதற்கு சிறப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருப்பது பொலிஷ் அதிகாரம் தமிழ் பொலிசாரை நியமிப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாக காட்டும் ஒரு செயலாக கூட இதை கருதலாம்.

இதேவேளை 34, வருடங்களாக மூடிக் கிடந்த யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரி யூடாக அச்சுவேலி நோக்கி செல்லுகின்ற சுமார் 2 கிலோமீற்றர்கள் தூரம் கொண்ட வீதியே நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த நிலையில் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது.எனினும் இன்னும் பல வீதிகள் திறக்கப்படாமலே உள்ளது.

பதவி நிலைகளில் பாதுகாப்பு தரப்பில் மாற்றங்கள் வந்தாலும் வழமையான கெடுபிடிகள் குறையவில்லை இப்போதும் புதிய வீதித்தடைகள் சில இடங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டும் உள்ளது.

ஊழலை ஒழிப்போம் என்ற கோஷத்துடன் ஆட்சிபீடம் ஏறிய தேசிய மக்கள்சக்தி அரசானது கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்.அவர்களுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியிருப்பது சரியாகவே படுகிறது.

ஏற்கனவே தேர்தல் காலத்தில் கூறிய பல விடயங்களை இந்த அரசு செயல்படுத்தவில்லை மாறாக தொல்பொருள் ஆய்வு வேலைகளையும், கடந்த காலங்களில் வடகிழக்கில் இருந்து அவர்களுடைய பூர்வீக சிங்கள கிராமங்களில் குடியேறிய சிங்களவர்களை மீண்டும் வடகிழக் கில் குடியேற்றும் திட்டத்தை புதிய அரசு ஆரம்பித்துள்ளது, அதுபோல் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் ஆய்வுகளை மேற் கொள்ள திட்டம் இட்டு

திருகோணமலையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கை தொடர்கிறது கடந்த 28.12.2024 அன்று இரவோடு இரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் பதாகை நடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து 01.01.2025 அன்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் கடந்த (06.01.2025) மாலை தொல்லியல் திணைக்களத்தினால் "1 கி மீ வட்டவான் தொல்லியல் நிலையம்" என குறிப்பிட்டு பதாகை ஒன்று நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

- **குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லி யலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது?**
- **அதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்பட்டுள்ளதா?**
- **எதிர்காலத்தில் அப்பகுதியில் புத்த விகாரை வருமா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.**

இவ்வாறான செயல்களை தட்டிக்கேட்கவும் வடகிழக்கில் தேசிய மக்கள் சக்தி அரசால் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஏழுபேருக்கும் முதுகெலும்பு இருப்பதாக தெரியவில்லை

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

1. கருணானந்தன் இளங்குமாரன்
2. சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன்
3. ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன்

வன்னி மாவட்டம்

4. செல்வராசா திலகேஷ்வரன்
5. மயில்வாகனம் ஜெகதீஷ்வரன்

மட்டக்களப்பு மாவட்டம்

6. கந்தசாமி பிரபு

திருகோணமலை மாவட்டம்

7. அருண் கேமச்சந்திரன்.

அரசின் பங்காளிகளான பாராளுமன்ற உறுப்பி னர்களும் மௌனமாகவே உள்ளனர்.

• • •



# ரோகிங்கியா அகதிகள் நாடு கடத்தப்படுவார்களா?

## ஹஸ்பர் ஏ ஹலீம்

மியான்மர் நாட்டில் இருந்து சர்வதேச கடல் மார்க்கமாக இலங்கை கடற்பரப்புக்குள் தஞ்சம் புகுந்த மியான்மர் அகதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மனிதாபிமானத்துடன் நடக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது.

மியான்மர் நாட்டைச்சேர்ந்த ரோகிங்யா அகதிகள் 103 பேர் முல்லைத் தீவு கடற் பரப்பில் 2024.12.19 அன்று படகு மூலமாக தஞ்சமடைந் திருந்தனர்.



இவர்கள் முல்லைத்தீவில் இருந்து 20.12.2024 அன்றைய தினம் திருகோணமலைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலை யில், பின் அங்கிருந்து முல்லைத்தீவில் உள்ள கேப்பாபுலவு விமான படைக்கு சொந்தமான முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரின் ரோகிங்யா புகலிடக்கோரிக் கையாளர்களை நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருந்தார்.

மேலும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மியான்மர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர், இலங்கையில் உள்ள ரோகிங்யாக்களின் பெயர் விபரங்களை ஏற்கனவே மியான்மர் அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.



இந்த சூழலில் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ரோகிங்யா அகதிகளை காப்பாற்றி பாதுகாப்பாக தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கிய இலங்கையின் உயிர்காக்கும் செயற் பாட்டை பாராட்டியுள்ள UNHCR அமைப்பு, இலங்கை அதிகாரிகளிடமிருந்து தொடர்ந்தும் இரக்கத்தையும் விருந்தோம்பலையும் எதிர்பார்ப் பதாக தெரிவித்துள்ளது.



இந்த அகதிகள் குறித்து கருத்து தெரி வித்துள்ள, இந்தியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் தமிழ் பிரபாகரன், “படகு வழியாக தஞ்சம் கோர முயன்ற மியான்மரைச் சேர்ந்த ரோகிங் கியா முஸ்லிம் அகதிகள் முல்லைத்தீவு பகுதி யில் மீட்கப்பட்டுள்ளனர். அகதிகளை உருவாக் கக்கூடிய நாடாக உள்ள இலங்கையில், இந்த அகதிகள் தஞ்சமடைந்திருப்பது மிகவும் துரதிர் ஷ்டவசமானது. மீட்கப்பட்ட ரோகிங்கியா அகதிகளை நாடுகடத்த எண்ணும் இலங்கை அரசின் திட்டமும் போக்கும் ஐ.நா.அகதிகள் சாசனத்துக்கு முரணானது. இதில் இலங்கை கையெழுத்திடவில்லை என சட்டப்பூர்வமாக அணுகுவது போல் இலங்கை அரசு அணுகலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் ‘மாற்றம்’ எனச் சொல்லக்கூடிய அனுரா அரசாங்கத்துக்கு அகதி கள் தொடர்பான சர்வதேச பார்வை ஏன் இல்லை என்ற கேள்வி அடிப்படையானது. அதே சமயம், நாடற்ற மக்களாக உள்ள ரோகிங்கியா அகதிகளை மியான்மருக்கு அனுப்புவது என்பது முற்றிலும் மனிதாபிமானமற்ற போக்கு. தங்களை தற்காத்துக்கொள்ளும் நோக்கில் ரோகிங்கியா அகதிகள் வழக்கமாக இவ்வாறான படகுப்பயணங்களை மேற்கொள்வது தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அவர்களின் நோக்கம் உண்மையில் இலங்கையை அடைவதாக இருந்த தில்லை, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளிலேயே அவர்கள் தஞ்சம் பெற முயன்றிருக்கின்றனர். இன்றைய நிலையில், உலகில் மோசமான அகதிகளாக உள்ளவர்களின் பட்டியலில் ரோகிங்கியா அகதிகள் பிரதானமாக உள்ளனர். அவர்கள் மியான்மரில் நிலவும் புத்த பேரினவாத மனப்பான்மையால் நாடற்ற மக்க ளாக உள்ளனர். அத்துடன் மியான்மரில் ஸ்திரத்தன்மையற்ற ஆட்சி உள்ள நிலையில், மக்களாட்சியற்ற இராணுவ அரசிடம் அவர்களை ஒப்படைப்பது அவர்களை நேரடியாக வதை முகாம்களுக்கு அனுப்புவது போன்ற செயல். ஒருவேளை புத்த பேரினவாதம் என்ற புள்ளியில் மியான்மர் இராணுவத்துடன் இலங்கையின் அனுரா அரசு இணைகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இவற்றுக்கு இலங்கை அரசாங்கம் பதில் கூறுவது/ பதில் கூறாமல் இருப்பது என்பது சிறுபான்மை மக்கள் மீதான இன்றைய அரசின் பார்வை என்னவாக இருக்கிறது என்பதை மேலும் தெளிவுப்படுத்தும். அதுமட்டுமின்றி, மியான்மரின் ரக்ஹைன் பகுதியை இராணுவ ரீதியாக கையில் எடுப்பதற்கான யுத்தம் அரக்கன் இராணுவ அமைப்புக்கும் மியான்மர் இராணுவத்துக்கும் நடந்து வரும் நிலையில், அங்கு பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மியான்மர் இராணுவம் அங்கு வான்வழி தாக்குதலை நடத்தி யுள்ளது. இப்படியான சூழலில், அம்மக்களை நாடுகடத்தும் இலங்கையின் முயற்சி என்பது அப்பட்டமான மனிதாபிமானற்ற புத்த பேரினவாத போக்கு’’ என்றார்.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய றிசாட் பதியுதீன் தெரிவிக்கையில்,

இலங்கையில்தஞ்சமடைந்துள்ளரோகிங்கி யாக்கள் தொடர்பில், சர்வதேச சட்டத்துக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்றில் உரையாற்றுகையில் வலியுறுத் தியுள்ளார்.

மேலும் இலங்கையில் புகலிடம் கோரி வந்த ரோகிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் தீர்மானம் குறித்து மிகுந்த கவலையடந்துள்ளதாக வும் தங்கள் நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகி யிருக்கும் இந்த மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு, சர்வதேச மனிதாபிமான கொள் கைகளை அரசு கடைபிடிக்க வேண்டும் எனவும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தேசிய மக்கள் சக்தி, தொழிலாளர்களுக்கு தோள் கொடுக்குமா?

துரைசாமி நடராஜா

இலங்கையில் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை மற்றும் அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனினும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது மௌனம் காக்கும் நிலைமைகளே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தற்போது ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி தொழிற்றுறை மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் காத்திரமான பங்களிப்பை நல்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி காணப்படுகின்றது. இதனிடையே இலங்கையில் பெருந்தோட்ட கைத்தொழில் துறையுடன் இணைந்த சமூகங்களை மேம்படுத்தும் அதே வேளை அதனை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் கூட்டு முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளதாக இலங்கை பெருந்தோட்டத்துறையின் முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.



பெருந்தோட்டத் தொழிற்றுறை நாட்டின் முதுகெலும்பாக ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்டது. இலங்கையின் அந்நிய செலாவணி வருமானத்தில் தேயிலை கணிசமான வகிபாகத்தைக் கொண்டிருந்தது. இதனடிப்படையில் *1959* ம் ஆண்டு இலங்கை அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் வகிபாகம் *59.6* வீதமாகக் காணப்பட்டது. இது *1969* இல் *57.8,1976* இல் *43.6, 1980* இல் *35.1, 1985* இல் *33.1, 1988* இல் *26.2, 1989* இல் *24.3,1990* இல் *24.9* என்ற வகிபாகத்தினைக் கொண்டிருந்தது. இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்த *2022* ம் ஆண்டில் கூட *1.3* பில்லியன் டொலர்கள் தேயிலை உற்பத்தி ஊடாக இலங்கைக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இலங்கையின் ஏற்றுமதி வருமானம் வருடந்தோறும் சுமார் *10* பில்லியன் தொடக்கம் *12* பில்லியன் டொலர்களாக பதிவாகின்றன. அதில் சுமார் *12* வீத பங்களிப்பு தேயிலை ஏற்றுமதியின் மூலமாகவே கிடைக்கின்றது. இதனை மேலும் உயர்த்த வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. இலங்கையின் ‘சிலோன் தேயிலை’ என்பது உலக வர்த்தகத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு அடையாளமாக காணப்படுகின்றது என்பதனை தகவல்கள் வலியுறுத்துகின்றன.

### தேயிலை மீதான நாட்டம் குறைவு

இலங்கையில் *1985* இல் *231,650* ஹெக்டேயர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டது. இதே வேளை தேயிலை உற்பத்தியைப் பொறுத்த வரையில் *1945* இல் *125.6* மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இது *1965* இல் *228.6, 1976* இல் *196.6, 1982* இல் *187.8, 1988* இல் *227.2, 1990* இல் *233.0* மில்லியன் கிலோ கிராமாக அமைந்திருந்தது. எனினும் படிப்படியாக தேயிலையின் செல்வாக்கு வலுவிழந்து செல்லும் ஒரு போக்கினையே பின்வரும் காலங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆடைத் தொழிற்றுறை, சுற்றுலா பயணிகளின் மூலமாக கிடைக்கும் வருமானம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று வீட்டுப் பணிப் பெண்கள் உழைத்தும் பணம் என்பவற்றின் ஆதிக்கம் நாட்டின் வருவாயில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தினைக் கொண்டு விளங்குகின்றமையும் தெரிந்ததேயாகும். இதே வேளை தேயிலைத் தொழிற்றுறை சமகாலத்தில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய அபாயகரமான சூழ்நிலையும் மேலெழுந்து காணப்படுகின்றது. காலநிலை மாற்றம், உரங்களின் விலை அதிகரிப்பு, உலக சந்தையில் தேயிலை மீதான நாட்டம் குறைவடைந்து செல்கின்றமை, மாற்றுப் பானங்களின் மேலோங்குகை, தேயிலைத் தொழிற்றுறையில் காணப்படும் அசமந்தப் போக்குகள், தொழிற்றுறை நவீனமயப்படுத்தப்படாமை எனப்பலவும் இத்தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

இந்நிலையில் சமகாலத்தில் சிறுதோட்ட தேயிலை உற்பத்தியாளர்களின் ஆதிக்கம் மெச்சத்தக்கதாக உள்ள நிலையில் பெருந்தோட்டங்கள் சீந்துவாரின்றிக் கிடக்கின்றன. பெருந்தோட்டத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தப். போவதாக கூறியவர்கள் இப்போது வாயடைத்துப் போயுள்ளனர். பெருந்தோட்ட பயிர்ச்செய்கையில் புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும். அதன்படி அங்கு வாழும் மக்கள் காணிகளை வாங்கி, அதில் தேயிலையைப் பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்ற வாக்குறுதிகள் இப்போது கனவாகி இருக்கின்றன.



இந்நிலையில் இலங்கையில் *2050* ம் ஆண்டளவில் பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்குவதற்கு தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளதாகவும்,*2050* காலப்பகுதியில் *100* சதவீதம் சிறுதோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்குவதற்கான காய்நகர்த்தல்கள் இடம்பெற்று வருவதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜா ஏற்கனவே குற்றஞ்சாட்டி இருந்தார்.

### பீட்டர் புரூவரின் கருத்து

இதேவேளை தேயிலை தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருவதும் நீங்கள் அறிந்ததேயாகும். இலங்கையில் அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் பல்பரிமாணமுடையவையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் பெருந்தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்கள் நாளாந்தம் பல்வேறு வடிவங்களிலான ஒடுக்கு முறைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் குற்றச்சாட்டு ஆழமாக சிந்திக்க வேண்டிய ஒன்றாகவுள்ளது. தொழில் ரீதியான உரிமை மீறல்கள் உள்ளிட்ட மேலும் பல உரிமை மீறல்களுக்கும் சொந்தக்காரரர்களாக பெருந்தோட்ட மக்கள் இருந்து வருவது வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.




வருமான ரீதியாக தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதிகமுள்ள நிலையில் இவற்றுக்கான தீர்வுகள் இன்னும் உரியவாறு எட்டப்படவில்லை. நாணய நிதிய மீளாய்வின்போது தான் ஒரு முறை இலங்கையில் நுவரெலியாவுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் அங்கு தோட்டத் தொழிலாளர்களை சந்தித்ததாகவும், அப்போது அவர்கள் தங்கள் வருமானம் மற்றும் செலவு விபரங்களை காட்டிய போது தான் அதிர்ச்சியடைந்து விட்டதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டத்தின் தலைவர் பீட்டர் புரூவர் அண்மையில் தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும். நாட்டின் சகல துறைசார் ஊழியர்களினதும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களது சம்பள விடயத்தில் ஆலோசனைகள் மற்றும் சிபாரிசுகளை வழங்குவதற்குசம்பளஆணைக்குழுக்கள்அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளன. அதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக எந்தவொரு ஆணைக்குழுவையும் நியமிக்க அரசாங்கம் பின்வாங்கி வருவதாகவும் கடந்த காலத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தோட்டங்களில் நிலவும் வேலை நாள் குறைவு, அதிகரித்த நெருக்கீடுகள், ஊதியப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தொழிற்றுறையில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வேகமாக குறைவடைந்து வருகின்றது. *1980* இல் பெருந்தோட்டங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை *541,971* ஆகவிருந்தது. எனினும் இவ்வெண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைந்த நிலையில் *2015* இல் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை *158,322* ஆகவிருந்தது. சமகாலத்தில் இவ்வெண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### பங்கீட்டு முறை

பெருந்தோட்டத் தொழிற்றுறையின் அபிவிருத்தியில் கம்பனிகள் காத்திரமான பங்களிப்பை வழங்கவில்லை என்றதொரு குற்றச்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# கனடாவில் மரபுத் திங்கள்

# நோக்கும் போக்கும்

தாயகத்தை விட்டகன்று, உலகின் பல பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழர், தனித்துவமான சமூகக் கட்டமைப்பாக உருக்கொண்டுள்ளனர். வாழ்புலங்களில் நிலைபெற்று விட்ட இச்சமூக அமைப்பில் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் மேலெழுந்து சமூக ஆளுமை கொண்டவர்களாகத் திகழ்ந்து வருகின்றனர். பன்முகப் பண்பாட்டைக் கொண்ட வாழ்புலத்தில் இனவடையாளங்களைப் பேணியவாறு தனித்துவமான சமூகமாக நிலைநிறுத்திக் தென்பது எளிதானதல்ல. வலுவான இனவிருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கான முன்னெடுப்புகளும் முயற்சிகளும் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறானதொரு முன் னெடுப்பே தமிழ் மரபுப் பேணல் நிகழ்வுகளாகும்.

மரபைப் பேணுதல் என்ற முன்னெடுப்பையும் அது விளைவிக்கும் பயன்களையும் கூறு வதற்கு முன்பாக எமது இனத்தின் மரபுசார் தொன்மையையும் அதைப் பேணிச் செல்வதில் மொழி கொண்டிருக்கும் வகிபாகத்தையும் நாம் தெரிந்து கொள்வது சிறப்பானதாகும்.

ஓரினத்தின் தொன்மையும் செழுமையும் அது கொண்டிருக்கும் மொழிவழியாகவே வெளிப்பட்டிருக்கும். வலுவான அடிப்படை மொழிக் கட்டமைப்பையும் அதன் வழியே வளர்ச்சி பெற்ற வலுவான மொழிப் பயன்பாட்டையும் கொண்டிருக்கும் இனமே காலந்தோறும் சிறந்த வரலாறுகளைப் படைத்துச் செல்லும். மொழி வழியே தம்மை நிலைநிறுத்தி வரலாறு படைத்த இனங்கள் உலகில் மிகக் குறைவு. அவ்வினங்களுள் ஒன்றே தமிழினம்.



தமிழினத்தின் வரலாறு மொழியை முன்னிறுத்தியே நடை பயின்றிருக்கின்றது. தமிழ்ப் புலவர்களை முன்னிலைப்படுத்தியே பண்டைய அரசுகளும் இயங்கியிருக்கின்றன. பின்னாட்களின் தமிழரல்லாதோரின் ஆட்சி நடைபெற்றபோதும் புலவர்கள் தமிழை முன்வைத்தே மக்களின் வாழ்வை இயக்கிச் சென்றனர். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு பக்தி இலக்கியங்கள்.

மொழி வழியாகவே தம்மை வழிநடத்திச் சென்றதமிழர்கள், வாழ்வியல் கோட்பாடுகளையும் தொன்மை சான்ற மரபுகளையும் பண்பாட்டு அறவொழுக்கங்களையும் வகுத்து, அவற்றை மொழி வழியாகவே பேணி வாழ்ந்தனர். அதனாற்றான் தன்னாட்சியற்ற நிலையிலும் தமிழினத்தால் வலிமை குன்றாது வாழ முடிகின்றது.

மொழி வழியாகவே தமிழர் கட்டமைக்கப்பட்டு, மரபுகள் பிறழாது வாழ்ந்து வருகின்றனர் என்பதைச் சற்றே ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஓரினத்தினுடைய தொன்றுதொட்டு பேணப்பட்டு வரும் மரபுகளும் பண்பாட்டு நடத்தைகளுமே அவ்வினம் வாழும் நாட்டின் சட்டங்களாக இருக்கும். அல்லது அவ்வினம் காலங்காலமாகப் பேணிவரும் வழிபாட்டு மரபுகளுக்குள் அவை பேணப்பட்டிருக்கும். ஆனால் தமிழினம் மரபுவழிப்பட்ட தாயகங்களைக் கொண்டிருப்பினும் தன்னாட்சியற்ற இனமாகவே உள்ளது. வடமொழி மரபுகளை அடிப்படையாகக் கொண்ட இறைவழிபாட்டையே பெரும்பாலான தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர். தாய்நாடும் இன்றி, தமக்கான மரபுவழிப்பட்டவழிபாட்டு நெறிகளுமின்றி வாழ வற்புறுத்தப்பட்ட பல இனங்கள் காலவோட்டத்தின் காணாமல் போய்விட்டன. ஆனால் தமிழர்களைச் சுற்றி அரணாக நின்று, அவர்களை இனமாகப் பேணிக்காத்தது தமிழ்மொழியே.

**பொன்னையா விவேகானந்தன்**
விரிவுரையாளர் –
ரொரன்ரோ
பல்கலைக்கழகம்.

தாய்மொழியான தமிழ்மொழிதான் காலங்காலமாக மரபுகளையும் பண்பாட்டு நடத்தைகளையும் இனத்துக்காகச் சுமந்து வந்திருக்கின்றது. அதுவே ஒவ்வொரு தலைமுறைக்கும் அதை ஊட்டிச் செல்கின்றது. தமிழினத்தின் உயிரும் உணர்வும் தமிழ்மொழிக்குள்ளேயே தக்க வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்கள் தாயகத்தில் வாழும்போது, மொழிவழியிலும் நிலவழியிலும் நின்று மரபுளைப் பேணிச்செல்வதில் ஒரு தொடர்ச்சியைக் கொண்டிருந்தார்கள். தமிழரல்லாத ஆட்சியாளர்களால் இடர்கள் ஏற்பட்டபோதும் போராட்டங்கள் வழியே அவற்றை எதிர்கொண்டார்கள். இவ்வாறான இடர்கள் தாயகத் தமிழர்களுக்குப் பழக்கப்பட்டிருந்தன. இயல்பாகவே அவர்களுக்குள் ஓர் போராட்டக் குணத்தைத் தோற்றுவித்திருந்தன. அண்மையில் ஏறு தழுவுதல் என்ற சல்லிக்கட்டு வீரவிளையாட்டுக்கு தடை ஏற்பட்டபோது தமிழர்கள் அதை எதிர்கொண்ட வடிவத்தைக் குறிப்பிடலாம்.

தமிழர்களின் இன்றைய பரம்பல், தாயகங்களைக் கடந்து, உலகெங்கும் விரிந்து சென்றிருக்கின்றது. ஏறக்குறைய ஒன்றரை மில்லியன் தமிழர்கள் (தமிழ்நாடு, ஈழம், மலேசியா, சிங்கப்பூர் தவிர) உலகெங்குத் பரந்து வாழ்கின்றார்கள். இவர்களின் பெரும்பாலானோர் நிரந்தரமாகவே வாழும் நாடுகளில் குடியேறியவர்களாக உள்ளனர். கடந்த நாற்பது ஆண்டுகளுக்குள் நடைபெற்ற இப்பெயர்வு தனித்துவமானதோர் தமிழ்ச்சமூகத்தை உருவாக்கியுள்ளது.

இவ்வாறாதோர் இனம் தன்னை மொழி வழிப்பட்டும் மரபு வழிப்பட்டும் நிலைநிறுத்திக் கொள்வதற்கான கோட்பாடுகளையும் நடைமுறை ஒழுங்குகளையும் நிறுவன மயப்பட்ட நிலையில் வகுத்துக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றது. இச்சிந்தனைத்தளத்தில் உருவாக்கப்பட்டதே கனடா தமிழ் மரபியல் நடுவமாகும். இவை தொடர்பான செயற்பாடுகளில் மரபு என்ற சொல் பலராலும் ஆளுகைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சொல்லை பாரம்பரியம் என்றும் அழைக்கலாம். இவ்விடத்தில் மரபு என்ற சொல்லை நாம் விளங்கிக் கொள்வது பொருத்மாக இருக்கும்.

### மரபு என்றால் என்ன?

இனம் என்ற சொற் பொருளை ஐக்கியநாடுகள் நிறுவனத்தின் சாசனம் இவ்வாறு தெரிவிக்கின்றது.

“தனக்கே உரித்தான ஒரு நிலத்தில், தனக்கெனத் தனித்துவமான வாழ்வியல் முறைகளையும் பழக்க வழங்கங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டு நீண்டகாலமாகத் தம்மைத் தாமே ஆண்டு வருகின்ற ஒரு மக்கள் குழுவே இனம் என்றழைக்கப்படும்”

இவ்வாறான இனமானது காலங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்ற வாழ்க்கைமுறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, வெளிப்பாடு என்பவற்றையே பண்பாடு நாகரிகம் என இரு பகுப்பாக நோக்கப்படுகின்றன. இவை இரண்டும் மரபியல் என்ற ஒரு சொல்லுக்குள் அடங்கி விடுகின்றன. இதனைக் பண்பாட்டு மரபு வளம் அல்லது பண்பாட்டுப் பாரம்பரியம் *(Cultural heritage)* என்றும் அழைப்பர்.

**‘பண்பாட்டு மரபு வளம்’என்ற சொல்லுக்கு விக்கிபீடியா பின்வருமாறு விளக்கம் தருகின்றது.**

“ஒரு இனமானது அதன் முந்திய தலைமுறைகளிடம் இருந்து மரபுரிமையாகப் தாம் பெற்றுக்கொண்ட பண்பாட்டு மரபு வளங்களால் பயன்பெற்று, அவற்றைப் பேணியும் மேம்படுத்தியும் அடுத்ததலைமுறைக்குக் கையளிப்பதே பண்பாட்டு மரபு வளம் ஆகும்.”



இவை கட்டடம், கருவிகள், சிற்பம் போன்ற இயல் வளங்களாகவோ *(physical artifacts)* நாட்டுப்புறப் பாடல், பழமொழிகள், தொழிற்கலைகள் போன்ற புலப்படா வளங்கள் அல்லது பண்புகளாகவோ *(intangible resources or attributes)*, பண்பாட்டு முக்கியத்துவம் பெற்ற இயற்கை வளங்கவோ *(natural heritage)* அமையலாம். இவை அனைத்து இனங்களுக்குமான பொதுவான விளக்கங்களே.

மரபு என்ற சொல் தொன்மை இலக்கணமான தொல்காப்பியத்தில் பெருமளவு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மரபியல் என்ற தனிப் பிரிவும் தொல்காப்பியத்தில் உண்டு. தொன்றுத் தொட்டுப் பொருளுக்கு உயர்ந்தோர் – அறிஞர்கள் – சொற்களை வழங்கி வந்த முறையே வழக்கு என்கிறார் தொல்காப்பியர். இந்த வழக்கே மரபாகும்.

வழக்கெனப் படுவ உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட்டாக லானே (தொல். பொருள். 638)

பின்னாளில் தோன்றிய நன்னூல் மரபு என்ற சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றது.

எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (நூற்பா எண் : 387) ‘அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ, அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்’ என்பதே இதன் பொருள். சொல்லையும் பொருளையும் மட்டும் அல்லாது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# 2024: எதிரிகளை நண்பர்களாக்கிய ஆண்டு:

## புதிய எதிரிகளை உருவாக்கிய ஆண்டு

### பகுதி – 1

தமிழில்: ஜெயந்திரன்

2001ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் திகதி, அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னர், பிபிசி ஊடகத்துக்கான பன்னாட்டுப் பாதுகாப்பு தொடர்பான ஊடகவியலாளராக எனது பணிகளை நான் ஆரம்பித்ததைப் பார்க்கும் போது, மிகவும் அதிகமான நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டாக இந்த ஆண்டை நான் பார்க்கிறேன்.



சிரிய அதிபரான அஸாட் திடீரெனப் பதவி கவிழ்க்கப்பட்டது, வடகொரிய சிப்பாய்கள் ரஷ்யாவுக்காகப் போரிடுவது, பிரித்தானிய மற்றும் அமெரிக்க ஏவுகணைகள் உக்ரேனுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து ரஷ்யா மீது ஏவப்படுவது, ஈரானிய ஏவுகணைகள் கப்பல்கள் மூலமாக அனுப்பப்படுவது போன்ற நிகழ்வுகள் இந்த ஆண்டிலே நடைபெற்ற நிகழ்வுகளாகும். அமெரிக்க ஆயுத உதவியுடன் லெபனானையும் காஸாவையும் தாக்கிய இஸ்ரேலின் நடவடிக்கைகள், யேமன் ஏவுகணைகள் இஸ்ரேல் மீது ஏவப்படல் போன்றவற்றையும் எடுத்துக்கொள்ளலாம்.



மிகவும் சிக்கலான, குழப்பகரமான போர்களாக இவை விளங்குகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது, ஒரு முக்கியமான கேள்வி எழுகின்றது. உலகிலே நடைபெறும் போர்களிடையே தொடர்புகள் இருக்கின்றனவா?

இங்கே ஒரு விடயத்தை மட்டும் மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். இது மூன்றாம் உலகப் போர் அல்ல. மேற்குலக நாடுகள் உக்ரேனுக்கு தொடர்ச்சியாக ஆயுதங்களை அனுப்புவதைத் தடுப்பதற்கு, இவ்வாறான நாடுகளைப் பயமுறுத்துவதற்காக புட்டின் மேற்கொள்ளும் ஒரு தந்திரமாகவும் இதனைப் பார்க்கலாம். ஆனால் தற்போது நடைபெற்றுவரும் போர்கள் அனைத்துமே பன்னாட்டுப் பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் இவற்றுக்கிடையே எவ்வாறான தொடர்புகள் இருக்கின்றன? முதலில், 2022ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 24ம் திகதியிலிருந்து உக்ரேனை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கத்துடன், ரஷ்யா ஒரு முற்றுமுழுதாக ஒரு ஆக்கிரமிப்பை மேற்கொண்டது. அதிலிருந்து உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.



**உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான போர்: எமது வாசலுக்கு வந்துவிட்ட ஐரோப்பிய யுத்தம்**

வடகொரியசிப்பாய்கள்ரஷ்யாவுக்குவரமுதலேயே உக்ரேனில் நடைபெற்றுவருகின்ற போர் ஓர் பன்னாட்டுப் பரிமாணம் கொண்ட ஒரு போராக மாறியிருந்தது. "சாவதற்கே தாங்கள் இங்கே வருகின்றோம் என்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காததொன்றாகவே அது இருக்கிறது." உக்ரேனின் ஆயுதப் படைகளின் ஊடகமான லூறிட் மீடியா (Lurid Media) பின்வருமாறு பதிவிடுகிறது: போர்க்களத்துக்கு புதிதாக வந்திருக்கின்ற இந்த வடகொரியச் சிப்பாய்கள் இணையத்திலுள்ள ஆபாசக் காட்சிகளில் மூழ்கிவிடுகிறார்கள். வடகொரியாவில் அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஐரோப்பாவில் நடைபெறும் ஒரு யுத்தத்தில் வடகொரியச் சிப்பாய்கள் பங்குபற்றுவது என்பது உண்மையில் பாரதூரமான விடயமாகும். அது எவ்வளவு பாரதூரமானது என்றால் மேற்குலக நாடுகளின் நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்துவதற்கு, உக்ரேன் மீது இதுவரை விதிக்கப்பட்டிருந்த தடை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. இதனால், தற்போது ரஷ்யாவுக்குள் இருக்கும் இலக்குகளைக் குறிவைக்கும் ஆற்றல் உக்ரேனுக்குக் கிடைத்திருக்கிறது. இது கிரெம்ளினின் கோபத்தைத் தூண்டியிருக்கிறது.



போர்க்களத்தில் நடக்கும் வீரதீரச் செயல்களுக்கு அப்பால், ஒரு டிவிஷன் எனக்கருதப்படக்கூடிய எண்ணிக்கையில், அதாவது 10 ஆயிரத்துக்கும் 12 ஆயிரத்துக்கும் இடையில் வடகொரியச் சிப்பாய்கள் இங்கு வந்துசேர்ந்திருப்பது என்பது உக்ரேனுக்குக் கசப்பான செய்தியாகும். சிப்பாய்கள் பற்றாக்குறையால் உக்ரேன் ஏற்கனவே திண்டாடிக்கொண்டிருக்கிறது.

"வடகொரியாவிலிருந்து வந்திருக்கின்ற சிப்பாய்கள் பலமானவர்களாக இல்லாவிட்டாலும் கூட, 10,000 என்பது உண்மையில் பெரும் எண்ணிக்கையாகும். அது இரண்டு பிரிகேட்டுகளுக்குச் சமமானது" என்று, உக்ரேன் சண்டைக்களத்தில் முன்னணியில் நிற்கும் கட்டளை அதிகாரியான றுஸ்ற்றாம் நுகுடீன் தெரிவிக்கிறார். உதாரணமாகக் கார்க்கிவ் பிரதேசத்திலிருந்து ரஷ்யத் துருப்புகளை விரட்டுவதற்கு இரண்டு பிரிகேட்டுகள் தேவைப்பட்டன.



"ஆம், எமது மேற்குலக நட்புநாடுகள் எமக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கிக்கொண்டிருப்பது உண்மைதான். அதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால் ஈரான் மற்றும் வடகொரிய நாடுகளிலிருந்து ரஷ்யா பெற்றுக்கொள்ளும் உதவியோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இவை மிகவும் குறைவானவையாகும். நாங்களும் ஐரோப்பாவும் வெற்றிபெற வேண்டுமானால் அவர்களைவிட எங்களுக்குத்தான் உதவி அதிகமாகக் கிடைத்திருக்க வேண்டும்."

ஆனால் வடகொரியச் சிப்பாய்கள் வர முன்னரே உக்ரேன் போர் பன்னாட்டுமயப்படுத்தப்பட்டு இருந்தது. பெயரளவில் சுதந்திர நாடாகப் பார்க்கப்படும் ஐரோப்பிய நாடான பெலரூஸிலிருந்தே உக்ரேன் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பெலரூஸ் தற்போது முற்றுமுழுதாக ரஷ்யாவை ஆதரிக்கின்றது. 2022ம் ஆண்டில், உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பை ரஷ்யா மேற்கொண்ட காலத்திலிருந்தே, வெடிபொருட்கள் இணைக்கப்பட்ட ஷாஹெட் ஆளில்லா விமானங்களை (Shahed drones) ஈரான், ரஷ்யாவுக்குக் கொடுத்துவருகிறது. மிகவும் பலம் வாய்ந்த பாலிஸ்ரிக் ஏவுகணைகளை கஸ்பியன் கடலூடாக ரஷ்யாவுக்கு அனுப்பியதாக ஈரான் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.



இந்தப் போரில் மேற்குலகம் வெறும் பார்வையாளராக மட்டும் இருக்கவில்லை. அமெரிக்கா, நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# எல்லைகளை விரிவுபடுத்தி முழு அளவிலான போருக்கு தயாராகின்றது உலகம்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், அவரின் நண்பன் இலோன் முஸ்க்கும் எதிரிகளுக்கு மட்டுமல்லாது தமது நண்பர்களுக்கும் மிகப்பெரும் தலையிடியாக மாறிவிட்டனர். கனடாவை தனது *51* ஆவது மாநிலமாக இணைப்பேன், பனாமா கால்வாயை கைப்பற்றுவேன், கிறீன்லாந்தை வாங்குவேன் இல்லை எனில் படையினரை கொண்டு கைப்பற்றுவேன், மெக்சிக்கோவை ஆக்கிரமிப்வேன். என ட்ரம்ப் ஒருபுறம் அகண்ட அமெரிக்கா நோக்கி சிந்தித்து வருகையில், வெனிசுலாவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த தனது ருவிட்டர் தளத்தை பயன்படுத்தி முஸ்க் தற்போது ஜேர்மனியில் இடம்பெறும் தேர்தலில் தனது செல்வாக்கை பயன்படுத்த திட்டமிட்டு காய்களை நகர்த்திவருகின்றார்.



எதிர்வரும் மாதம் 23 ஆம் நாள் ஜேர்மனியில் இடம்பெறும் தேர்தலில் ஜேர்மனியின் மாற்றுக் கட்சி *Alternative for Germany (AfD)* எனப்படும் தீவிர வலதுசாரிக் கட்சியான ஏ.எப்.டி என்ற கட்சிக்கு தனது ஆதரவை வழங்கியுள்ள இலோம் முஸ்க், பிரித்தானியாவிலும் ஒரு ஆட்சி மாற்றத்தை கொண்டுவருவதற்கு முயன்று வருவதாக பிரித்தானியா அரசு குற்றம் சுமத்தியுள்ளது. ஏ.எப்.டி கட்சி ஜேர்மனின் பிரதான கட்சிகளுக்கு மிகவும் சவாலான கட்சியாக மாறி வருகின்றது.


தற்போதைய பிரித்தானியா பிரதமர் ஸ்ராமரை பேய் என தனது எக்ஸ் தளத்தில் முஸ்க் தெரிவித்தது பிரித்தானியா அரசியல் வட்டாரங்களில் கடும் விசனத்தை தோற்றுவித்துள்ளது. ஆனால் விக்கிலீக்ஸ் உரிமையாளர் ஜூலியன் அசங்கேவைப் போல அவரை இலகுவாக கைது செய்து பிரித்தானியா அரசு அடைக்க முடியாது. ஏறத்தாழ *500* பில்லியன் டொலர்கள் சொத்துகளுக்கு அதிபதியான அவர் அமெரிக்க அரச தலைவரின் நெருங்கிய நண்பருமாவார்.

ஐரோப்பாவின் அரசியலில் முஸ்க் தலையிடு கின்றார் எனவும், தமது ஜனநாயகத்தை அவர் குறைவாக மதிப்பிடுகின்றார் எனவும் ஸ்பெயினின் பிரதமர் பெற்ரோ சன்சே தெரிவித்துள்ளார். நெதர்லாந்து, இத்தாலி மற்றும் ஒஸ்ரியா என்று முஸ்கின் தலையீடுகள் மெல்ல மெல்ல அதிகரித்தே வருகின்றது. அமெரிக்க நிறுவனத்தால் ஐரோப்பா விரைவில் ஆளப்படுமா என்ற கேள்வியை தவொசிங்டன் போஸ்ட் பத்திரிகை தனது கருத்துபத்தியில் தெரிவித்துள்ளது.

மறுவளமாக கிறீன்லாந்தை தன்னுடன் இணைப்பதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளதாகவே அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது தேசிய பாதுகாப்புக்கு அது தேவையானது என ட்ரம்ப் தெரிவித்தாலும், அங்கு ஏற்கனவே அமெரிக்காவின் தளம் உள்ள நிலையில் அதனை ஏன் வாங்கவேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றன.




டென்மார்க்கின் ஆளுகையில் உள்ள உலகின் மிகப்பெரும் தீவான கிறீன்லாந்தில் தங்கம், யுரேனியம் போன்ற கனிமப்பொருட்களும், எண்ணெய்வளமும் உள்ளன. டொனால்ட் ட்ரம்பின் மகன் இந்த வாரம் கிறீன்லாந்திற்கு பயணம் மேற் கொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.



அதாவது அங்கு உள்ள கனிமவளங்களை கையகப்படுத்துவதன் மூலமும், மாறிவரும் கால நிலைமாற்றத்தால் ஆர்ட்டிக் கடல் பகுதியில் உள்ள பனி மலைகளின் அழிவுகள் அங்கு நாடுகள் செல்வதற்கான அல்லது தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிகளை ஏற்படுத்தி வருவதாலும் அதனை பயன்படுத்தி தனது பொருளாதாரத்தை மேம்படுத்த அமெரிக்கா முறட்டுள்ளது என்பது தான் யதார்த்தம்.

அதனை உறுதிப்படுத்துவதுபோலவே கிறீன்லாந்தில் உள்ள கனிமவளங்களை அகழ்வு செய்யும் உடன்படிக்கைகளை சீன நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும் என அமெரிக்கா தமக்கு தொடர் அழுத்தங்களை தருவதாக கிறீன்லாந்தின் *Tanbreez Mining* என்ற நிறுவனத்தின் தலைமை அதிகாரி கிரக் பார்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் கிறீன்லாந்தை அமெரிக்கா தன தாக்கிக் கொள்வது என்பது ரஸ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது, அங்கிருந்து அமெரிக்கா ரஸ்யா மீது தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என ரஸ்ய நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் குழுவின் தலைவர் அன்றே கற்றபொலொவ் கடந்த வியாழக்கிழமை(9) தெரிவித்துள்ளார். ஆர்ட்டிக் பிராந்தியத்தில் கிறீன்லாந்து அதிகளாவான பரப்பளவைக் கொண்டுள்ளது. உலகின் மிகப்பெரும் தீவும் அதுவே. மேலும் இது ஆர்ட்டிக் பிராந்தியத்திற்கு நேரிடையான நுழைவுப் பாதையை ஏற்படுத்தும். அதாவது கண்டங்களுக்கு இடையிலான எதிர்கால மோதல்களுக்கு அது அமெரிக்காவுக்கு அனுகூலமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ட்டிக் பகுதியில் அதிகரிக்கும் நேட்டோ படையினரின் பிரசன்னம் மோதல்களுக்கு வழி வகுக்கும் என ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீனின் ஆலோசகர் நிகொலே பற்றுசேவ் கடந்த செப்ரம்பர் மாதம் தெரிவித்திருந்தார். அதேசமயம், ஆணுவாயுதங்களை வீசும் வான்படை விமானங்களுக்கான தளம் ஒன்றை அமெரிக்கா அமைத்து வருவதாக டென்மார்க்கிற்கான ரஸ்யாவின் தூதுவர் விளடீமீர் பார்பின் தெரிவித்துள்ளார்.




கிறீன்லாந்தின் வடமேற்கு கரையில் தற்போதுள்ள அமெரிக்காவின் *Pituffik Space Base* விண்வெளித் தளம் ஆர்ட்டிக் பகுதியில் இருந்து வரும் ஆணுவாயுதத் தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறியும் தளமாகும். அதனை அமெரிக்கா தற்போது நவீனமயப்படுத்தி வருகின்றது. பில்லியன் டொலர்கள் செலவில் நவீன ரடார் நிலையங்களை அது அமைத்துவருகின்றது. அணுவாயுதங்களை சுமந்து செல்லும் எப்-*35* எனப்படும் அமெரிக்காவின் ஐந்தாம் தலைமுறை விமானங்களையும் அங்கு நிறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்த தளம் முன்னர் என *Thule Air Base* அழைக்கப்பட்டது ஆர்ட்டிக் பகுதியில் ரஸ்யா தனது உறுதித்தன்மையை பலப்படுத்தவேண்டும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தேசிய மக்கள்... தொடர்ச்சி ...

சாட்டு நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. இக்குற்றச்சாட்டுக்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்பு தெரிவித்திருந்தது. பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவு செய்யப் பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்த போதும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சமாகும். இத்தனை பேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே தாம் கொண்டு நடாத்துவதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்திருந்தது.

மேலும் 150 வருட வேதன முறையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் வருமானப் பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களிடம் நாம் கோரினோம். ஆனால் அவர்கள் அது குறித்து அக்கறை செலுத்தவில்லை. தொழிலாளர்களை அதே நிலையில் வைத்திருக்கவே தொழிற்சங்கங்கள் ஆசைப்படுகின்றன. 2020 ம் ஆண்டு 300 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை உற்பத்தி செய்த கம்பனிகள், 2022 இல் 251 கிலோ கிராம் தேயிலையையே உற்பத்தி செய்தன. இவ்வாறு உற்பத்தி வீழ்ச்சி கண்டபோதும் தொழிலாளர்களுக்கான நலன்களை பெற்றுக் கொடுப்பதில் தாம் பின்நிற்கவில்லை என்றும் முதலாளிமார் சம்மேளனம் மேலும் தெரிவித்திருந்தது.

இதேவேளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது ஆட்சிபீடமேறியுள்ள நிலையில் இலங்கையில் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையுடன் இணைந்த சமூகங்களை மேம்படுத்தும் அதேவேளை அதனை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் கூட்டு முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளதாக இலங்கை பெருந்தோட்டத்துறையின் முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது. பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட பெருந்தோட்டத் துறையானது பல தசாப்தங் களாக இலங்கையின் பொருளாதாரத் தில் முக்கிய பங்கை கொண்டுள்ளது. புதிய அரசாங்கம் பெருந்தோட்டக் கைத்தொழிலின் நிலையான அபிவிருத்திக்கு முன்னெடுக்கும் அனைத்து திட்டங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை நல்குவதோடு அதற்குரிய பொருத்தமான சூழலையும் ஏற்படுத்திக் கொடுப்போம்.

### நீண்டகால உற்பத்தித்திறன்

பெருந்தோட்டத் துறையை பொறுத்தவரையில் ஆளணி, உற்பத்தித்திறன் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க சவால்கள் இன்னும் தொடர்ந்த வண்ணமாகவே காணப்படுகின்றன. இந்நிலையில் இத்துறையின் நீண்டகால உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்த தன்மையை உறுதி செய்வதற்காக, பயிர் பல்வகைப்படுத்தல், நிலையான வேளாண்மை கொள்கைகளுடன், புத்தாக்கம், இயந்திரமயமாக்ககல் மற்றும் தன்னியக்கமயமாக்கல் ஆகியவற்றை ஊக்குவிப்பது உள்ளிட்ட கூட்டாக இந்த சவால்களை எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தையும் முதலாளிமார் சம்மேளனம் வலியுறுத்தி இருந்தது. இதேவேளை நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தேயிலை, இறப்பர் போன்ற முக்கிய ஏற்றுமதிகளுக்கான உலகளாவிய போட்டித்தன்மையை அதிகரிப்பதில் அரசாங்கத்தின் ஆதரவையும் முதலாளிமார் சம்மேளனம் எதிர்பார்த்திருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் தேசிய மக்கள்சக்தி அரசாங்கம் பாரபட்சமற்ற ரீதியில் மலையக மக்களின் பிரச்சினைகளை அடிமட்டத்தில் இருந்து தீர்த்து வைக்கப்போவதாக உறுதியளித்திருக்கின்றது. மலையகத்தை பிரதிபலித்து இதுவரை தேசிய அரசியலில் ஈடுபட்டவர்கள் மலையகத்தின் முன்னேற்றத்துக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் சில மாறுபட்ட அரசியல் கலாசாரத்தால் அம்முயற்சிகளை வெற்றி கொள்ள முடியாமல் போனதாகவும், எனினும் இந்த அரசியல் கலாசாரம் தமது ஆட்சிக் காலத்தில் நிச்சயம் மாற்றியமைக்கப்பட்டு மலையக அபிவிருத்திக்கு வலுசேர்க்கப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை நிவர்த்தி செய்வதற்கும், தோட்டத் தொழிற்றுறையின் மீள்தன்மை மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகளை உருவாக்குவதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்நின்று செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்தின் இச்செயற்பாடானது பெருந்தோட்டங்களும், தொழிலாளர்களும் ஒரு புதிய பாதையில் காலடி எடுத்து வைப்பதற்கு உந்து சக்தியாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை.

• • •

## சீன வெளி... தொடர்ச்சி ...

னர் மாலைவேளை அதிபரின் மாளிகை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தாக்குதலைத் தொடர்ந்து அந்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டு மக்களின் பாவனை தடை செய்யப்பட்டிருந்தது. ஆயுதக்குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதலில் ஆயுதக்குழுவைச் சேர்ந்த 18 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 6 பேர் காய மடைந்துள்ளதாகவும், தமது தரப்பில் ஒருவர் மரண மடைந்துள்ளதுடன், 3 பேர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் காலணித்துவத்தின் கீழ் இருந்த இந்த நாட்டில் இருந்து பிரான்ஸ் படையினர் வெளியேற வேண்டும் என அதன் அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார். அதன் அடிப்படையில் 1,000 பேர் கொண்ட பிரான்ஸ் படையினரில் ஒரு தொகுதி படையினர் கடந்த மாதம் வெளியேறியிருந்தனர். மாலி, நைகர் மற்றும் பேர்கினா பசோ ஆகிய நாடுகளும் பிரான்ஸ் படையினரை தமது நாடுகளில் இருந்து வெளியேற்றியிருந்தன.

ஆபிரிக்க நாடுகளில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு பிரான்ஸ் உதவியதாகவும், ஆனால் ஆபிரிக்க நாடுகள் அந்த நன்றியை மறந்து விட்டன ஆனால் அதற்கு காலம் வரும் எனவும் கடந்த செவ்வாய்க்கிழமை(7) ஆபிரிக்க நாடுகளின் தூதுவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் பிரான்ஸின் அதிபர் அமானுவேல் மக்ரோன் தெரிவித்திருந்தது அங்கு குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவால் ... தொடர்ச்சி ...

உள்ள நாடு ஒன்று தாக்கப்பட்டால் அதனை பாதுகாப்பதற்கான சரத்து 42-7 நடைமுறைப்படுத்தப்படும். அதாவது ஏனைய ஐரோப்பிய நாடுகள் பதில் தாக்குதலை மேற் கொள்ளவேண்டும். இவை எல்லாம் செய்திகள் தான் என ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் போலா பின்கோ தெரிவித்துள்ளார்.

எனினும் கிறீன்லாந்தையும், பனாமா கால்வாயையும் தேவையேற்பட்டால் படைபலத்தை பயன்படுத்தி கைப்பற்றுவேன், அவை அமெரிக்காவின் பாதுகாப்புக்கு தேவையானவை என கடந்த செவ்வாய்க்கிழமை(7) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ட்ரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார்.

டென்மார்கின் ஆளுமையில் உள்ள உலகின் மிகப்பெரும் தீவான கிறீன்லாந்தில் தங்கம், யுரேனியம் போன் கனிமப்பொருட்களும், எண்ணைவளமும் உள்ளன. டொனால்ட் ட்ரம்ப்பின் மகன் இந்த வாரம் கிறீன்லாந்திற்கு பயணம் மேற்கொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வெனிசுலாவை... தொடர்ச்சி ...

வழங்கி அமெரிக்கா ஊக்கப்படுத்தி வருகின்றது. லத்தீன் அமெரிக்க நாடுகளை கைப்பற்றும் நோக் கத்துடன் லத்தீன் அமெரிக்க பிர தேசத்தில் உள்ள ஊழல்மிக்க அரசியல்வதாதிகள் மற்றும் படை அதிகாரிகளை அமெரிக்கா தனக்கு சார்பான பணிகளில் அமர்த்தி வரு கின்றது. அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகம் அதற்காக தொகை எழுதப்படாத காசோலைகளை வழங்கி வருகின்றது. லீமா குழு என்ற போர்வையில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பணியாற்றியவர்களை நாம் முன்னர் முறியடித்திருந்தோம், எமது லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் இருந்து அகற்றியிருந்தோம். ஆனால் தற்போது அவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைபொருள் வினியோகஸ்த்தர்கள், ஊழல்வாதிகளை ஊக்ககப்படுத்தி மீண்டும் வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெனிசுலாவில் பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொள்வதற்கு முயன்ற 7 பேரை தாம் கைது செய்திருப்பதாகவும், அவர்களில் 3 பேர் உக்ரைன் நாட்டை சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய நான்குபேரும் அமெரிக்கா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் வெனிசுலா கடந்த செவ்வாய்க்கிழமை(7) தெரிவித்திருந்தது.

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து ஆயுதப் புரட்சிகளை மேற்கொள்ள முனைந்த 25 நாடுகளைச் சேர்ந்த 125 பேரை தாம் கைது செய்திருப்பதாக வெனிசுலா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில்... தொடர்ச்சி ...

அதாவது புறநிலை உண்மையை அல்லது புறநிலைச் சூழலை (Objective condtions) அடிப்படையாகக் கொண்டு கொள்கை-கோட்பாடு-யதார்த்தம்-நடைமுறை-சாத்தியப்படக்கூடிய மேலான நடைமுறை ( Policy-Theory-Reality - Practice -Praxis ) என்ற படிமுறை சிந்தனை முறைக்கூடாக அரசியல் முன்னெடுப்புக்களை அறிவார்ந்து வடிவமைக்க வேண்டும்.

இதில் கற்பனைக்கு இடமில்லை. இரத்தமும் தசையுமான நடைமுறையை நோக்கி மேற்படி உரியவகையில் அறிவார்ந்த பாதையில் மேற்கொள்ள வேண்டும். இதனை விஞ்ஞானபூர்வமான அணுகுமுறை அல்லது அறிவார்ந்த அணுகுமுறை என்று அழைப்பர்.

தமிழ் சிந்தனை பாரம்பரியத்தில் திருக்குறள், இத்தகைய அணுகுமுறை பற்றி கூறியிருக்கிறது.

‘நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்’- 948

என்கிற குறளும்,

தீர்மானம் எடுத்தல்-செயல்படுதல் தொடர்பாக

அழிவதூஉம் அவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.-461.

என்கிற குறளும் கவனத்துக்குரியது.

எந்த ஒரு செயலையும் செய்யும் போது அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் விளைவுகளையும் சேர்த்து ஆய்ந்து கணக்கு போட்டு செயலில் ஈடுபட வேண்டும்.

கிரேக்க தத்துவ ஞானத்தில் கிமு 5 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட “Cause and effect” என்ற கோட்பாடும் மேலே சொன்ன குறள்களின் கருத்தை பிரதிபலிப்பதே.

தொடரும்...

**கனடாவில்... தொடர்ச்சி ...**

அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபே. 'பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு' *(Tradition)* என்கிறது தமிழ் அகராதி.

முன்னைக் காலங்களில் நடைமுறைக்குட் பட்டிருந்த நடத்தைகளில் உண்மையும் நன்மையும் இருப்பின் அவை தொடரும் தலைமுறையினரால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான நடத்தைகளே பின்னாட்களில் மரபாக நிலைத்து விடுகின்றன. பழைமையைப் பேணுவதும் முன் னோர் வழியைப் போற்றி நடப்பதுவும் மரபின் முக்கியக் கூறுகள் ஆகும். ஊர்தோறும் நாடுதோறும் மக்களினம் வாழும் இடந்தோறும் இம்மரபுகள் நீக்கமற நிறைந்துள்ளன.

மரபு என்ற சொல் இன்று மரபியல், மரபினம், மரபுக் கூறு, மரபுக் கலை, மரபுரிமை, மரபுத் தொடர், மரபு நோய், மரபணு என்று பல்வேறு துறைகளில் பயன்பட்டு வருவதை நீங்கள் அறியலாம்.

ஓரினம் கொண்டிருக்கும் தனித்துவமான வாழ்வியல் கொள்கைகளை உள்ளடக்கமாகக் கொண்டதே மரபு. மரபு என்ற கரைகளுக்குள் அடங்கி ஓடும் ஆற்றைப் போன்றதே அவ்வினத்தின் வாழ்வாகும். கரைகளுக்கடையே அழகுற ஓடிச் செல்லும் ஆற்றின் பேரழகே பண்பாடாகும்.

**மரபுப் பேணல் செயற்பாடுகள்:**

தமிழினத்தினது வாழ்வின் ஒவ்வொரு அசைவும் மரபுகளாலேயே உருவாக்கப்பட்டுள்ளது. தனி மனிதரின் பிறப்பில் இருந்து இறப்புவரை மரபுக் கோட்பாடுகள் மறைந்தும் வெளிப்பட்டும் ஆளுமை செலுத்துகின்றன. சமூகமாக இயங்கும் போதும் மரபுக்கோட்பாடுகளே வழிகாட்டிச் செல் கின்றன. எடுத்துக்காட்டாக எமது அடிப்படை வாழ்வியல் தேவைகளான உணவு, உறையுள், உடை என்பன முழுமையாக மரபுசார்ந்தே வடி வமைக்கப்பட்டன. எமது சடங்குகள், விழாக்கள், தனி மனித ஒழுக்கங்கள் யாவும் அவ்வாறே. தாயக வாழ்வில் மரபோடிரண்டறக் கலந்த வாழ்வே நிலைபெற்றிருக்கின்றது. மரபை மீறியதொரு நடத்தையை சமூகம் எளிதில் ஏற்றுக்கொள்ளாது.

புலம்பெயர்ந்த பின் தோன்றிய புதிய சமூகக் கட்டமைப்பு, மரபுசார் கோட்பாடுகளைப் பேணுவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்க வில்லை. கட்டுப்படுத்தவல்ல நிறுவனச் செயற் பாடுகளும் தொடக்கத்தில் இருக்கவில்லை. பெரும் பாலானோர் அகதிகளாகவே குடியேறியதால் பொருளாதாரம் சார்ந்து வாழ்வை நிலைநிறுத்தக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. அதே வேளை தமிழீழத் தாயகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டச் சூழலும் சிந்தனையைத் தாயகம் நோக்கித் திருப்பியிருந்தது.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தான் மரபுப் பேணல் தொடர்பான சிந்தனை வலுப்பெறத் தொடங்கியது எனலாம். இந்த சிந்தனைத் தொடர்ச்சியின் வளர்ச்சியாகவே *2010*இல் தமிழர் மரபியல் நடுவம் தோற்றம் கொண்டு தைத்திங்களைத் தமிழர் மரபுத் திங்களாக பிரகடனம் செய்தது. இதுவே நிறுவனமயப்படுத்தப்பட்ட மரபுப் பேணல் செயற்பாட்டின் தொடக்கமாகவும் அமைந்தது.

தொடர்ந்து மார்க்கம் மாநகர சபையில் உறுப்பினராக இருந்த திரு லோகன் கணபதி மாநகரசபை வழியே 2012இல் முதல் அரசநிலை அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார். இதையடுத்து, வேறு சில மாநகர சபைகளும் ஒன்றாரியோ அரசும் மைய அரசும் அங்கீகாரத்தை வழங்கின. இந்த அங்கீகாரங்களைப் பெற கடுமையாகப் பாடுபட்ட அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

தைத் திங்கள் தமிழரின் வாழ்வில் பல் வகைச் சிறப்புகளைக் கொண்ட மாதமாகும். உழவைப் போற்றும் பொங்கல் விழாவும் தமிழர் ஆண்டுத் தொடக்கமும் இந்திங்களுக்குரிய சிறப் பாகும். தாயகத்தில் பொங்கல் விழாவைத் தொடர்ச் சியாக நான்கு நாட்களுக்குக் கொண்டாடுவர். இத்திங்களின் சிறப்புணர்ந்தே இதை மரபைப் போற்றும் திங்களாகத் தேர்ந்து கொண்டனர்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தைத்திங்கள் தமிழர்களின் மரபுத் திங்களாகக் கனடாத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

***மரபுரிமைச் செயற்பாடுகளை முதன்மையான மூன்று பகுப்புகளுக்குள் அடக்கலாம்.***

***1. இனம், மொழி, பண்பாடு, கலை தொடர்பில் தொடர்ச்சியாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்***
***2. பிறவினத்தோருக்குத் தமிழர் வரலாற்றுப் பெருமையை உணர்த்துதல்***
***3. தமிழர் வாழ்வியற் செயற்பாடுகளை மரபு சார்ந்து கட்டமைத்தல்***

இளையோரை நோக்கிய செயற்பாடுகளில் முதன்மை பெறவல்ல செயற்பாடுகளாகக் கீழ் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ***எமது இளையோருக்கான மொழி, பண்பாடு, கலை, இனஞ் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.***
- ***மொழி, கலை, பண்பாடு, இனம் சார்ந்த செயற் பாட்டுக் களங்களை உருவாக்கிக் கொடுத்தல்.***
- ***செயற்படும் மாணவர்களுக்கு ஊக்கம் வழங்கிநடத்துதல்.***
- ***இளையோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாக நடத்துதல்.***
- ***உலகலாவிய இளையோர் அமைப்புகளை எதிர்கால இருப்பு நோக்கி ஒருங்கிணைத்தல்.***
- ***மாணவரிடையே விழிப்புணர்வு ஆக்கங் களை உருவாக்கும் நிகழ்வுகளை நடத்துதல்.***

***பிறவினத்தோருக்குத் தமிழர் வரலாற்றுப் பெருமையை உணர்த்துதல் தொடர்பான செயற் பாடுகளைக் கீழ்வருமாறு பகுத்துக் கூறலாம்.***

- ***நாம் பல நாடுகளிலும் பிறவினங்களோடு இணைந்தே வாழ்கின்றோம். எமதுபண்பாடு, மொழி, கலை என்பன தொடர்பில் பிறவினத் தோருக்குப் பெருமதிப்பை ஏற்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.***
- ***பிறவினத்தோர் எம்மினம் குறித்து உயர் வான எண்ணத்தைக் கொண்டிருக்கும் நிலையில், நாம் புலம்பெயர் மண்ணில் எம்மைச் சிறப்பாக நிலைநிறுத்த முடியும்.***
- ***ஓரினம் கொண்டிருக்க வேண்டிய அனைத் துச் சிறப்புகளும் எமக்கு உண்டு. அதைத் திட்டமிட்டுப் பிறவினத்தோரிடையே எடுத்துச் செல்லவேண்டும்.***
- ***பள்ளிகளில், வேலைத்தலங்களில், பொது அமைப்புகளில் உள்ள தமிழர்கள் மரபுரிமை திங்களைப் பயன்படுத்தி இந்தப் பணிகளைச் செய்யவேண்டும்.***

தமிழர் வாழ்வியற் செயற்பாடுகளை மரபு சார்ந்து கட்டமைத்தல் மரபுப் பேணல் செயற்பாடுகளின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகின்றது.

நாம் வாழிட நாடுகளுக்குஏற்ப, பொருத்த மான தமிழர் பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது தமிழினம் சார்ந்த இருப்பு எமது நடத்தைகளிலேயே தங்கியிருக்கின்றது. கடந்த நாற்பது ஆண்டுகாலப் புலம்பெயர் வாழ்வில் நாம் பல மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றோம். இந்த மாற்றங்களில் பல, எமது பாரம்பரிய பண்பாட்டு மரபுகளை மாற்றிச் செல்கின்றன. எமது நடத்தைகளை எமது மரபொழுங்கில் கட்டமைத்து, அடையாளப் பேணல்களுடன் நாம் இயங்க வேண்டும். எமது நடத்தைகளையே இளையோரும் பின்பற்றிச் செல்வர். வாழிட நாடுகளில் எமது அன்றாட வாழ்வை, வலுவான இருப்பு சார்ந்து கட்டமைத்துச் செல்வதும் இந்த மரபுரிமை நடுவத்தின் பணியாகின்றது.

ஆண்டுதோறும் மரபுரிமை நடுவம் முன் னெடுத்துவரும் மரபுத்திங்கள் நிகழ்வுகள் ஒவ்வோர் ஆண்டும் புதிய பொருண்மைத் தலைப்பைக் கொண்டதாக இருக்கும். இவ் வாண்டு அறிவியல் தமிழ் என்ற பொருண் மைப் பொருள் சார்ந்து நிகழ்வுகள் முன்னெடுக் கப்படுகின்றன. ஜனவரி முதலாம் நாள் மரபுத் திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமான மரபுத் திங்களின் தொடக்க விழா ஜனவரி 4-ம் நாள் வோன் பிராந்தியத்தில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து கனடாவின் பல்வேறு பகுதிகளிலும் மரபுத்திங்கள் விழாக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நிறைவுவிழா எதிர்வரும் பெப்ரவரி முதல்நாள் வெகு சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

**நிறைவுரை**

தமிழர் மரபுத் திங்கள் அரச அங்கீகாரங்களைப் பெற்றதைத் தொடர்ந்து இந்த நிகழ்வுகளைக் அரச கல்விச்சபைகளும் முன்னெடுத்து வருகின்றன. பள்ளிகளில் தமிழரல்லாத மாணவர்களும் பங்கு கொள்ளும் வண்ணம் தமிழ் மரபு சார்ந்த நிகழ்வு களும் கற்பித்தல்களும் நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளில் ஆண்டுதோறும் பல அரசியல் பிரமுகர்களும் அரச அலுவலர்களும் கலந்து சிறப்பித்து வருகின்றனர். இவை தமிழர் சிறப்பு களைப் பிறவினத்தோர் உணர்ந்து கொள்ள வழி செய்கின்றது.

கனடாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் மரபுரிமை நிகழ்வுகள், உலகம் தழுவியதாக மாற வேண்டிய தேவையுள்ளது. தற்போது பிரித்தானியாவில் தமிழ் மரபுப் பேணலுக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளமை மகிழ்ச்சியான செய்தி. நிகழ்வுகளில் வாழ்வோரும் அங்கீகாரங் களுக்காகக் காத்திராது தன்னெழுச்சியாக மரபுரி மைச் செயற்பாடுகளைத் தைமாதத்தில் முன் னெடுக்க வேண்டும்.

தமிழருக்கென தனிநாடும் தன்னாட்சி கொண்ட அரசும் இல்லை. தமிழரல்லோதோரின் ஆளுகைக்குட்பட்டே தமிழர் எங்கும் வாழ் கின்றனர். ஆளுகைக்குட்பட்ட இனத்தின் அடை யாளங்களை, ஆளும் இனம் சிறுகச் சிறுக அழிக்க முனைவதே உலக வரலாறு. தமிழகம், தமிழீழம் போன்ற தாயகப் பகுதிகளில் இந்த அழிப்புகள் வெளிப்படையாகவும் கட்புலனாகா வடிவங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன. இதை உணர்வதற்கும் மரபுகளைப் பேணுவதற்கும் எமக்குள் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இந்த விழிப்புணர்வை கற்றறிவாளரே ஏற்படுத்த வேண்டும். எதிர்கால தமிழ்ச்சமூகத்தின் அடை யாளம் சார்ந்த இருப்பைக் கருதி, உறுதியோடும் வலிமையோடும் இயங்குவோம்.

• • •

**அமெரிக்காவில்... தொடர்ச்சி ...**

இதுவரையில் 5 பேர் மரணமடைந்துள்ளதாக வும், 7,500 இற்கு மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைப்பதற்கு போராடி வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த 30 வருடங்களில் இரண்டு முறை களே ஜனவரி மாதத்தில் கலிபோர்னியா பகுதி யில் காட்டுத்தீ ஏற்பட்டிருந்தது. அதிலும் இந்த முறை ஏற்பட்ட தீ மிகவும் பாரதூரமானது. இது காலநிலை மாற்றத்தின் விளைவு என விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்பட்ட இழப்புக்களின் தற்போதைய மதிப்பு 52 பில்லியன் டொலர்களாக இருந்தாலும் அது 800 பில்லியன் டொலர்களாக இருக்கும் என வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

### எல்லைகளை ... தொடர்ச்சி ...

ட்ரம்பின் திட்டத்தை கவனமாக உள்வாங்கி ரஸ்யா தன்னை பலப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே தான் தனது எனப்படும் பனிப் பாறைகளை உடைத்து பயணிக்கும் கப்பல்களின் அபிவிருத்தியில் ரஸ்யா அதிக கவனம் செலுத்திவருகின்றது. அதாவது உலகம் ஒரு மிகப்பெரும் போருக்காக தன்னைப் பலப்படுத்தி வருவதை தான் நடக்கும் சம்பவங்கள் காட்டுகின்றன. ரஸ்யாவினால் அண்மையில் ஏவப்பட்ட ஓர்னிச் எனப்படும் கைப்பசொனிக் ஏவுகணையானது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மிகப்பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒலியைவிட 10 மடங்கு வேகத்தில் பயணிக்கும் இந்த ஏவுகணையை தடுக்க முடியாது என்பதுடன், அணுவாயுதங்கள் இன்றியே அது ஆணுவாயுதங்கள் ஏற்படுத்தும் சேதங்களை ஏற்படுத்தவல்லது.

அதுமட்டுமல்லாது, தற்போது ஏமனின் குதீஸ் அமைப்பினரின் ஏவுகணைகள் மற்றும் ஈரானின் ஏவுகணைகள் போன்றவற்றை நேட்டோவின் நவீன ஏவுகணைகளைக் கொண்டுள்ள இஸ்ரேலினால் தடுக்க முடியாது இருப்பதும், அமெரிக்கா தனது பாதுகாப்பு வியூகங்களை




மாற்றியமைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் 11 விமானந்தாங்கி கப்பல்களின் கடல் ஆளுமையையும் புதிய தொழில்நுட்ப ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் முறியடித்துவருகின்றன. ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் ஒரு வான்பாதுகாப்பு கவசத்தை தற்போது உலகில் முதல் முதலாக உருவாக்கியுள்ளது ஈரான்.

ஊலகில் ஏற்பட்டுவரும் இந்த மாற்றங்களை ஈடுசெய்ய பல நாடுகள் தமக்கான வாய்ப்புக்களை தேடிவருகின்றன. சிரியாவிலும், காசா பகுதியிலும் இஸ்ரேல் மேற்கொள்ளும் விரிவாக்கம், உக்ரைனிலும், ஆபிரிக்காவிலும் ரஸ்யா மேற்கொள்ளும் விரிவாக்கம், தற்போது பனாமா, கனடா, மெச்சிக்கோ மற்றும் கனடா என அமெரிக்கா மேற்கொள்ள நினைக்கும் விரிவாக்கம் என்பன உலக ஒழுங்கில் ஏற்படப்போகும் பாரிய மாற்றத்திற்கான நிகழ்வுகள்.

இந்த நிலையில் பல்டிக் கடற்பகுதியின் நுளைவுப் பாதையாக ரஸ்யாவின் ஆளுமையில் உள்ள கலனிங்கிராட் பகுதி தமக்கு சொந்தமானது என தெரிவித்துள்ளார் லித்துவேனியாவின் அரச தலைவர் கிறானஸ் நொசீடா 13 ஆம் நுற்றாண்டில் இருந்து கேத்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கருதப்பட்ட இந்த பகுதி பல நாடுகளிடம் பல தடவைகள் போரில் கைமாறிய பகுதியாகும். தற்போது அதனை ரஸ்யா வைத்திருக்கின்றது. ஆனால் அதற்கு தற்போது மேற்குலக கூட்டணியில் உள்ள லித்துவேனியா உரிமை கொண்டாட நினைப்பது தற்போதைய மோதல்களை மேலும் சிக்கலாக்கும் என்பதுடன், ஒரு முழு அளவிலான போருக்குள்• • •உலகம் செல்லவே

### 2024: எதிரிகளை ... தொடர்ச்சி ...

ஆகியவை இணைந்து, பெருமளவான நிதியையும் இராணுவ ரீதியிலான உதவிகளையும் வழங்கிவருகின்றதன் காரணத்தினாலே தான், இன்று வரை ரஷ்ய இராணுவத்துக்கு எதிராக உக்ரேன் தாக்குப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

“இங்கே அடிப்படையில் சமனற்ற அணுகுமுறைகளையே நாங்கள் பார்க்கிறோம்” என்று பிபிசியின் உக்ரேன் விவகாரங்களுக்கான நிபுணரான விற்றாலி ஷெவ் ஷெங்கோ தெரிவித்தார். மேற்குலகம் இவ்விடயத்தை மிகவும் அவதானமாகவும் கட்டுப்பாட்டுடனும் அணுகிவருவதனால் உக்ரேனின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. ஆனால் இந்தப் போர் விரிவடைந்து வருவதைப் பற்றி மொஸ்கோ கரிசனைகொள் வதாகத் தெரியவில்லை. உண்மையில் அதையே அவர்கள் விரும்புவது போலவே தோன்றுகின்றது.

**மத்திய கிழக்கு: தலைகீழாய்ப் போன சதுரங்க விளையாட்டு**

தனது எதிரிகளின் ஆற்றலை முற்றுமுழுதாக ஒடுக்குவதற்கு, இஸ்ரேல் 2024ம் ஆண்டை முழுமையாகப் பயன்படுத்தியது. மத்திய கிழக்குப் பிரதேசத்தின் சிக்கலான தன்மையின் காரணமாக உக்ரேன் யுத்தம் சிக்கலற்றதாகக் காட்சியளிக்கிறது. ஏனென்றால், இந்தப் பிரதேசத்தில் சில போர்கள் வெளிப்படையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சில உறங்கு நிலையில் இருக்கின்றன. ஆனால் அனைத்தும் ஒரே நேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனால் இங்கே ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கிறது, உலக ஊடகங்களில் பொதுவாக பதிவிடப்படுவதற்கு மாறாக, மத்திய கிழக்கின் பெரும் பகுதியில் போர் நடைபெறவில்லை. டுபாய், சவுதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகளில் போர் அச்சுறுத்தல் இன்றி, நாளாந்த வாழ்க்கை இயல்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஓரளவு பிரச்சினைகளை அண்மையில் சந்தித்த நாடுகளான ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் கூட, அங்கு வாழும் பெருமளவான மக்களைப் பொறுத்தவரையில், அமைதியான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து வருகிறார்கள்.

**சிரியா: புதிய மேலாண்மை**

சிரிய அதிபரான பஷார் அல்-அஸாட்டின் பதவிக் கவிழ்ப்பு எதிர்பார்க்கப்படாததொன்றாகவும் விரைவானதாகவும் அமைந்திருந்தது. இதனை யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. சிரியாவை விட்டுச் சென்றிருக்கும் அல்-அஸாட் கூட இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. அதுமட்டுமன்றி, அல்-அஸாட்டை ஆதரித்து வந்த தெஹ்ரானோ, மொஸ்கோவோ அல்லது தென் பெய்ரூத்தோ எதுவுமே எதிர்பார்த்திருக்கவில்லை. பல பில்லியன் டொலர்கள் நிதிவளத்தைக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் புலனாய்வுச் சமூகம் கூட இந்த மாற்றத்தை கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை.

வெறும் இரண்டு வார காலத்துக்குள், ஐக்கிய நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றால் ‘பயங்கரவாதிகள்’ எனப் பட்டியலிடப்பட்டிருக்கும் ஹாயாற் தாஹ்ரீர் அல் ஷாம் (*Hayat Tahrir Al Sham*) என்றழைக்கப்படும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கூட்டணி, சிரியாவின் வடமேற்கில் உள்ள தமது பலம் வாய்ந்த தளத்திலிருந்து புறப்பட்டு, ஒவ்வொரு நகரமாகக் கைப்பற்றி, தற்போது சிரியாவின் புதிய ஆட்சியாளராக மாறியிருக்கிறார்கள்.

தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்த இந்தப் போராளிகள் சிரியா முழுவதிலும் மிகவும் விரைவாக முன்னேறி, அஸாட்டின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தனர். இந்த நிகழ்வு ஒரு நாட்டுக்குள்ளே மட்டும் நடந்து முடிந்த ஒரு நிகழ்வு அல்ல. இதற்குப் பல பன்னாட்டுப் பரிமாணங்கள் இருக்கின்றன.

தென் இஸ்ரேலில் ஹமாசினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலடியாக இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள், குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஈரானின் நட்பு நாடுகளுக்குப் பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கிறது. 2015ம்ஆண்டில், அஸாட்டின் ஆட்சிக்கு தீவிரவாதிகளிடமிருந்து எதிர்ப்பு ஏற்பட்ட போது, ஈரான், ஹிஸ்பொல்லா, ரஷ்யா ஆகிய அனைத்தும் உதவிக்கு வந்து தீவிரவாதிகளை விரட்டியடித்திருந்தன. ஆனால் இம்முறை அப்படி நடைபெறவில்லை. உக்ரேன் போரில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இஸ்ரேலுடன் மேற்கொண்ட குறுங்கால யுத்தத்தின் காரணமாக ஹிஸ்பொல்லா பலமிழந்து போயிருக்கிறது. இலையுதிர்காலத்தில், இஸ்ரேலிய போர் விமானங்கள் இலகுவாகத் தமது வான்வெளியை ஊடுருவியது கண்டு ஈரான் அதிர்ந்து போயிருக்கிறது.

இதன் விளைவு என்னவென்றால் ஆபத்து ஏற்பட்ட பொழுது அஸாட்டுக்கு உதவ அவரது கூட்டாளிகளால் முடியவில்லை. அதே வேளை, தீவிரவாதிகளை ஆதரித்த துருக்கியோ தனக்குச் சாதகமான முறையில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது.

நன்றி: பிபிசி



## முற்றும் துறந்த ... தொடர்ச்சி ...

ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் துறை கையகப்படுத்தி வைத்துள்ளது.

இங்கு 58 சட்டவிரோத கடைகள் அமைக்கப்பட்டிருப்பது பற்றி தொல்லியல் திணைக்களம் எந்த கவலையும் கொள்ளவில்லை என்பதோடு. பல வேளைகளில் அவர்களுக்கு சாதகமாக நடந்துகொள்வதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதுஒரு இனவாதப் போக்கினை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

தொல்பொருள்துறை மட்டுமில்லாமல் திருகோணமலை மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், போரின்போது மக்கள் உயிர்பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்த வேளையில், அரசின்மற்றுமொரு அங்கமான வனத்துறை மக்கள் விவசாயம் செய்த 41361 ஏக்கர் நிலத்தினை தமது மனம் போன போக்கில் எல்லைக்கற்களை போட்டுப்பிடித்து வைத்துக்கொண்டு காணியினுள்செல்லவோ அல்லது விவசாயம் செய்யவோ விடாமல் தடுத்து வருகிறது.

அது மட்டுமல்லாமல் வனத்துறை எல்லைக் கற்களை இடாத பகுதிகளில் கூட மக்கள் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட வனத்துறையிடம் ஒப்புதலைபெறமுடியாத நிலைகாணப்படுகிறது.

இதேபோன்று வனவிலங்கு துறையானது கால்நடை வளர்ப்பாளர்கள் பலதலைமுறைகளாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வந்த நிலங்களை அவர்கள் போரின்போது இடம்பெயர்ந்த வேளையில். எல்லைக் கற்களை போட்டுப் பிடித்து வைத்துக்கொண்டு. இந்நிலங்களில் காட்டு விலங்குகள் மட்டுமே மேயலாம். வீட்டு விலங்குகள் மேய முடியாது என்று தடுத்து வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கானகால்நடைவளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் போதிய உணவின்றி இன்னலுருகின்றன.

எடுத்துக்காட்டாக. ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 600 கால்நடை வளர்ப்பாளர்கள் தமது 28.000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றி இன்னல் படுகின்றனர். இவர்கள் கால்நடை வளர்ப்பையே தமது வாழ்வாதாரமாக கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இத்தகைய சிக்கல் தம்பலகாமம். குச்சவெளி கிண்ணியா மூதூர் மொறவெள முதலிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுகிறது.

அதேபோன்று. அரசின் இன்னும் ஓர் அங்கமான துறைமுக அதிகார சபையானது. திருகோணமலையின் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 11 கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 5.572 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி வைத்திருக்கிறது. இப்பகுதிக்குள்வாழும் 763 குடும்பங்கள் தமது குடியிருப்பு காணிகளில் எதுவித செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது இருப்பது மட்டுமின்றி. விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத சூழலும் காணப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு உணவு உற்பத்தியை பெருக்குமாறு கூறுகின்ற அதேவேளை அரசின் அங்கங்களானதொல்பொருள்துறை, வனத்துறை, வனவிலங்குத்துறை, துறைமுக அதிகார சபை முதலியன விவசாய நடவடிக்கைகளை தடுப்பதன் மூலம் உணவு உற்பத்தியை குறைத்தும் வருகின்றமை நகைப்புக்குரிய விடயமாக உள்ளது.

இந்த விடயத்தில் ஆளும்தரப்பு உரிய கவனம் செலுத்தி தொல்பொருள்துறை. வனத் துறை வனவிலங்குத்துறை. துறைமுக அதிகார சபை. புத்தபிக்குகள் ஆகியோர் பிடித்து வைத்துள்ள மக்களுடைய காணிகளை விடுவித்து. மக்கள்விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவும். அதன்வழிநெல்உள்ளிட்டஉணவு உற்பத்தியினை பெருக்கவும் ஆவண செய்ய வேண்டும்'' என்றார்.

• • •

## ரோகிங்கியா ... தொடர்ச்சி ...

கோரிக்கை விடுத்துள்ளார்.

அதே போல் எதிர்க் கட்சி தலைவர் சஜீத் பிரேமதாச தெரிவிக்கையில் “ ரோகிங்யா அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம். இம் மக்களை திருப்பி அனுப்புவது மனிதாபிமான சட்டங்களை மீறும் செயலாகும். இம் மக்களுக்கு மியான்மர் நாட்டில் பாரபட்சம் காட்டப்படுவதுடன் சித்திரவதை செய்யப்படுவதை உலகமே ஏற்றுள்ளது. எனவே மீண்டும் நாடு கடத்த வேண்டாம்'' என்றார்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் முல்லைத் தீவு மாவட்ட செயலகம் முன்பாக ''ரோகிங்யா அகதிகளை நாடு கடத்த வேண்டாம். மனித உரிமைகள் சட்டங்களை இலங்கை பாதுகாக்க வேண்டும் எனக்கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ரோகிங்கிய அகதிகளைத் திருப்பியனுப்பவேண்டாம் எனக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவிக்கையில், முல்லைத் தீவில் தஞ்சமடைந்த ரோகிங்யா அகதிகளை திருப்பி அனுப்புவது அவர்களின் உயிருக்கு ஆபத்தானது. அவர்களின் விருப்பமின்றி மியான்மருக்கு நாடு கடத்த வேண்டாம். மியான்மரில் இடம் பெறும் போர் அச்சம் காரணமாக தமது உயிர்களை பாதுகாத்துக் கொள்ள தப்பியோடி வந்தடைந்துள்ள அப்பாவி அகதிகள் 103 பேரில் நாற்பதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் சிறுவர்களும் அடங்குவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளதுடன்பாதுகாப்பானதேசமொன்றில் அரசியல் புகலிடம் பெற்றுக் கொள்வதுதான் இந்த அப்பாவி அகதிகளின் நோக்கமாகும். இந்த அகதிகளின் விபரங்களை மியான்மருக்கு கையளிப்பதன் மூலம் இவர்களுக்கு மாத்திரமன்றி அங்கு வதியும் இவர்களின் உறவினர்களுக்கும் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்துவதுடன் உயிர் அச்சுறுத்தலாகவே அமையும். ஏதேனும் தேசமொன்றில் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் அச்சம் மற்றும் எச்சரிக்கை கொண்ட நபர்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்புவது சர்வதேச சட்ட நியதிகளுக்கு எதிரான செயற்பாடாகும். இந்த அகதிகளை அவர்கள் வெளியேறிய நாட்டின் பயங்கர வலைக்குள் மீள அனுப்புவதன் மூலம் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்'' என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ரோகிங்யா அகதிகளை சந்தித்துப் பேச இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம்.ஸுஹைர் வலியுறுத்தியுள்ளார்.

அதே போல் மியான்மரிலிருந்து நாட்டை வந்தடைந்த அகதிகள் குற்றவாளிகளோ, சந்தேக நபர்களோ அல்ல என்பதனால் அவர்களைத் தடுத்துவைப்பது முற்றிலும் தவறு எனச் சுட்டிக்காட்டியிருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ, ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு இடமளிக்கப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான மனிதாபிமான அக்கரை கொண்டு இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் குரல் கொடுப்பது அம் மக்களை பாதுகாப்பாக இலங்கையில் அடைக்களம் கொடுக்க முன்வர வேண்டும் என்பதே ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

• • •

## பயங்கரவாத ... தொடர்ச்சி ...

போராட்டத்தை நடத்திய ஜே.வி.பி.யும் இந்தச் சட்டத்தினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டது. ஜே.வி.பி.யின் முன்னணி உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்படுவதற்கு, தடுப்புக் காவலில் வைக்கப்படுவதற்கு, காணாமல் ஆக்கப்படுவதற்கு இந்தச் சட்டம்தான் துணைபுரிந்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பாக ஜே.வி.பி. உள்ளது. அதனால்தான் ஆரம்பத்திலிருந்தே ஜே.வி.பி. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக, அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து செயற்பட்டது. தற்போது ஜே.வி.பி.யை பிரதானமாகக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தவறிவருகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த குறுகிய காலத்துக்குள் இரண்டு சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அது கையில் எடுத்தது. கடந்த நவம்பரில் மாவீரர் தின நிகழ்வுகளின் போதும், அம்பாறை அறுகம்குடாவில் தாக்குல் நடத்தப்படலாம் என்று தகவல் வெளியான போதும் சிலரைக் கைது செய்வதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இந்த அச்சுறுத்தலின் பின்னணியில், மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்; அவர்களில் ஒருவர் ஈரானில் இருந்து வந்தவர் என தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து பல முக்கிய தகவல்கள் கிடைத்ததாகவும், விசாரணைகள் தொடர்ந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கைது, தடுத்துவைத்தல் என்பவற்றுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமே பயன்படுத்தப்பட்டது.

சந்தேகிக்கப்படுபவர்களை கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் உதவக் கூடிய ஒரு சட்டமாக பயங்கரவாதத் தடைச் சட்டமே இருப்பதால் அதனைக் கைவிட அரசாங்கம் தயங்குகின்றதா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது. அதனால், இந்தச் சட்டம் நிரந்தமானதான ஒன்றாக மாறிவிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

சந்தேகப்படும் ஒருவரை நீதிமன்ற உத்தரவின்றி கைது செய்வதற்கும், கைதான ஒருவரை தடுத்துவைத்து விசாரிப்பதற்கும் வழிவகுக்கக்கூடிய ஒரு சட்டமாக பயங்கரவாதத் தடைச்சட்டம்தான் உள்ளது. அதனால், இந்த இரண்டுக்கும் வழி தரக்கூடிய மற்றொரு சட்டம் நடைமுறைக்கு வரும்வரையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசுக்கு அவசியமான ஒன்றாகவே இருக்கும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்









